கனடாவின் மூத்த தமிழ் இதழ் | விளம்பரம்™ • VLAMBARAM™ | Canada's Oldest Tamil Newspaper




35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca T el: 416-282-8059 www.vlambaram.com




நதி: 35 பாலம்: 24 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 15, 2025

# லிபரல் கட்சி பெரும்பான்மையை நோக்கி நகருகிறது!

ஒன்ராறியோ மாகாணத்தின் Markham - Unionville தொகுதியின் கனடிய மத்திய அரசிற்கான நாடாளுமன்ற உறுப்பினராக 2025 ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பழமைவாதக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வென்ற Michael Ma பழமைவாதக் கட்சியில் இருந்து விலகி லிபரல் கட்சியில் தான் சேருவதாக 2025 டிசெம்பர் 11ஆம் திகதி ஊடகங்களுக்கு விடுத்திருந்த அறிக்கை யில் தெரிவித்திருந்தார்.

அவர் அந்த அறிக்கையில், “கனடாவின் எதிர்காலத்திற்கான ஒற்றுமை மற்றும் தீர்க்கமான நடவடிக்கைக்கான நேரம் இது. இதற்குத் தேவையான, நிலையான, நடைமுறை அணுகுமுறைகளை கனடியப் பிரதமர் மார்க் காணி வழங்குகிறார். எனது தொகுதியான மார்க்கம் - யூனியன்வில்லில் வாழும் மக்களின் கதவைத் தட்டும்போது இதையே ஒவ்வொருவரிடமிருந்தும் நான் கேட்கிறேன். நான் பொதுச் சேவையில் நுழைந்தது மக்களுக்கு உதவுவதற்காக, தீர்வுகளில் கவனம் செலுத்துவதற்காக, பிரிவை வளர்ப்பதற்காக அல்ல. இதனால், எனது மனசாட்சியின்படி பிரதமர் காணி அரசுடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்” எனத் தெரிவித்திருந்தார்.

அவர் அந்த அறிக்கையில் பழமைவாதக் கட்சித் தலைவரிடம் தான் பழமைவாதக் கட்சியிலிருந்து வெளியேறப் போவதாகத் தெரிவித்ததாகக் குறிப்பிட்டிருந்தார். அவர் பழமைவாதக்கட்சித் தலைவர் பியர் பொலியவ் (Pierre Poilievre)பற்றி எதுவும் அந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை.

மைக்கல் மா வின் அறிவிப்பிற்குப் பிறகு பழமைவாதக்கட்சித்தலைவர் பியர் பொலியவ் சமூக ஊடகங்களில் மார்க்கம் -யூனியன்வில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுத்து விட்டார் எனக் குறிப்பிட்டிருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், “தனது சமூகத்தில் வாழ்க்கைச் செலவை உயர்த்தும் லிபரல் கட்சி அரசின் பணவீக்க செலவினங் களுக்கு எதிராகப் போராடுவதற்காக மார்க்கம்-யூனியன்வில் தொகுதி மக்களால் மைக்கல் மா ஒரு பழமைவாதக்கட்சி யினராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்று அவர் மக்களால் எதிர்க்கத் தேர்ந்தெடுக் கப்பட்ட கொள்கைகளையே ஆதரிக்கப் போவதாகக் கூறியுள்ளார். இன்று அவர் கைவிட்ட மக்களில் பெரும்பான்மையோர் அவரை தங்களுக்குக் கட்டுப்படக்கூடிய வாழ்க்கைச் செலவை ஏற்படுத்தப் போராடுவதற்காகத் தேர்ந்தெடுத்தவர்கள். அவர் அவர்களுக்குப் பதிலளிக்க வேண்டும்” என்று தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார்.



Prime Minister Mark Carney and Michael Ma, Member of Parliament for Markham-Unionville.
Thanks: Justin Tang / The Canadian Press

2025 ஏப்ரலில் நடைபெற்ற மத்திய அரசிற்கான தேர்தலில்தான் மைக்கல் மா முதன்முதலாக நாடாளுமன்ற உறுப்பின ராகத் தெரிவு செய்யப்பட்டார். மார்க்கம்-யூனியன்வில் தொகுதியின் உறுப்பினராக அதற்கு முன்னர் இருந்தவர் லிபரல் கட்சியைச் சேர்ந்த போல் சியாங் (Paul Ciang). அவரும் 2025 ஏப்பிரலில் நடைபெற்ற தேர்தலில் போட்டியிருந்தார். ஆனால், அவர் தேர்தல் பிரசார காலத்தில் இன்னொரு தொகுதியில் போட்டியிட்ட பழமைவாதக் கட்சி வேட்பாளரை சீனத் தூதரகத்திற்குக் காட்டிக் கொடுத்து அவர்களிடம் இருந்து வெகுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்திருந்தார். இது பிரதான ஊடகங்களில் செய்தியாகப் பரவத் தொடங்கியதும் அவர் அத்தொகுதியில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடு வதிலிருந்து விலகிக் கொண்டார். இதை அடுத்து லிபரல் கட்சி மார்க்கம்-யூனியன்வில் தொகுதியில் லிபரல் கட்சி யின் சார்பில் போட்டியிட Peter Yuenஐ தெரிவு செய்திருந்தனர். நடைபெற்ற மத்திய அரசிற்கான தேர்தலில் மைக்கல் மா 50%இற்கு அதிகமான வாக்குகளைப் பெற்று லிபரல் கட்சி வேட்பாளரை 8% அதிகமான வாக்குகளால் வென்றிருந்தார்.

மைக்கல் மா Hong Kongஇல் பிறந்தவர். இவர் தனது 12ஆவது வயதில் கனடா விற்குக் குடிபெயர்ந்தவர். பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் வன்கூவர் நகரில் தனது இளமைக் காலத்தில் வாழ்ந்து பாடசாலைக் கல்வி பயின்றவர். பழமைவாதக்கட்சியின் சார்பில் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற கனடிய மத்திய அரசிற்கான பொதுத்தேர்தலில் Don Valley East தொகுதியில் போட்டியிட்டு இரண்டாம் இடத்திற்கு வந்தவர்.




2025 நொவெம்பர் 4ஆம் திகதி பழமைவாதக்கட்சியின் சார்பில் நோவாஸ்கோசியா மாகாணத்தில் Acadie-Annapolis தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான Christopher d'Entremon பழமைவாதக் கட்சியிலிருந்து விலகி லிபரல் கட்சியில் சேர்ந்தார்.




இவரைத் தொடர்ந்து நொவெம்பர் 6ஆம் திகதி பழமைவாதக்கட்சியின் சார்பில் அல்பேட்டா மாகாணத்தில் Edmonton-Riverbend தொகுதியில் தெரிவு செய்யப் பட்ட நாடாளுமன்ற உறுப்பினராக Matthew Jeneroux தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதாகத் தெரிவித்தார். அவர் எப்போது தான் பதவி விலகுவதாகக் கூறாவிட்டாலும், அவர் தான் பதவி விலகுவதாகக் கூறியதில் இருந்து எந்த நாடாளுமன்ற வாக்கெடுப்பு களிலும் பங்குபற்றுவது இல்லை.




இவர்கள் இருவரையும் தொடர்ந்து 6 வாரங்கள் முடிவடைவதற்கு இடையில் தற்போது மைக்கல் மா பழமைவாதக் கட்சியிலிருந்து விலகி லிபரல் கட்சியில் சேர்ந்துள்ளார்.




2026 ஜனவரியில் பழமைவாதக்கட்சியின் மாநாடு நடைபெற இருக்கிறது. அம் மாநாட்டில் பழமைவாதக்கட்சியின் தலைவ ரான பியர் பொலியவ்இனுடைய தலைமைப்பதவி மதிப்பாய்வு செய்யப்படும். Angus Reid நிறுவனத்தின் தரவுகளின்படி பெரும்பான்மையான பழமைவாதக்கட்சி உறுப்பினர்கள் பியர் பொலியவ் தமது கட்சித்தலைவராக இருந்து அடுத்த தேர்தலை சந்திக்க வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால், இந்தப் பெரும்பான்மை கடந்த ஒகஸ்ற் மாதத்தில் 68% இருந்தது. தற்போது டிசெம்பர் மாதத்தில் 58%ஆகக் குறைந்திருக்கிறது.

பழமைவாதக்கட்சி உறுப்பினர்களின் ஆதரவை பியர் பொலியவ் பெற்றிருந்தா லும் அவர் கனடியப் பொதுமக்களின் பெரும்பான்மை ஆதரவை அடுத்த தேர்தலில் பெறுவாரா என ஆய்வு செய்த Angus Reid நிறுவனம் கனடியர்களில் 27%ஆனோர் தங்களைத் தீவிர வலது சாரியாகக் கருதுகின்றனர் எனவும் 34%ஆனோர் தங்களை தீவிர இடதுசாரி யாகக் கருதுகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளது. கனடியர்களில் 39% ஆனோர் தங்களை நடுநிலையானோர் எனக் கருதுகின்றனர்.

இந்த நடுநிலையானோரிடம் இருந்து கடந்த முறை தேர்தலின்போது பழமை வாதக்கட்சிக்கு வாக்களித்தவர்களைவிட மேலதிகமாக ஒரு மில்லியன் வாக்குகளை அடுத்த தேர்தலில் பழமைவாதக்கட்சி பெற்றாலே மத்திய அரசைக் கைப்பற்ற முடியும் எனத் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

# Canada House by CONCORD

## Toronto

Special Deal



- Heart of the Downtown Toronto
- 2 Spectacular Buildings with shared Amenities
- Special 2 year mortgage only 0.1%
- Very Flexible deposit structure
- Price starting as low as $500,000
- Parking & Locker available for Purchase
- Maintenance Fee 0.77$ per Sq.Ft.

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.

# ATTENTION REALTORS & HOME BUYERS



**Available Till Midnight Including Weekends & Holidays**

**ANTON DHARMASEELAN**
MORTGAGE BROKER
#2 Mortgage Alliance Agent in All of Canada & #1 in GTA

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| Purchase | Major Banks |
| Refinance | Alternative Lenders |
| Self Employed | B Lenders |
| Bad Credit | Credit Unions |
| Investment Property | Trust Companies |
| Renewal | Private Lenders |

# 416 704 1200

anton@myhomemls.ca
Corporate:: #1410-5140 Yonge Street

Broker #10530
MORTGAGE ALLIANCE

Vlambaram - December 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-14 5:56 PM Page 4



# பேரழிவில் இருந்து மீளுதல் – இலங்கையின் சவால்!

## – அரவின் –

கடந்த மாத இறுதியில் வங்கக் கடலில் உருவாகிய இரண்டு காற்றுச் சுழற்சிகள், ஒன்றாக இணைந்து, இலங்கையைத் துவம்சம் செய்து விட்டன.

அவை, டிட்வாப் புயலாக மாறியபோது கிட்டத்தட்ட ஒன்றரை நூற்றாண்டு கால வானிலை தகவல் சேகரிப்புகளுக்கு அப்பாற்பட்ட ஓர் அரிய நிகழ்வு அரங்கேறியது. பசுபிக் மற்றும் அட்லான்டிக் கடல்களில் தோன்றும் மூர்க்கமான சூறாவளிகளைப்போல் அல்லாமல், டிட்வா சூறாவளி வலுக் குன்றியதாக இருந்தாலும், இலங்கையில் பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

வழக்கத்துக்கு மாறான பாதையில் நகர்ந்து, மலையகத்தில், 500 மில்லி மீட்டருக்கு அதிகமான மழையைக் கொட்டித் தீர்த்தது. அதன்விளைவாக ஆறுகள் பெருக்கெடுத்தன, நீர்த் தேக்கங்கள் நிரம்பி வழிந்தன.

வேறுவழியின்றி முன்னறிவிப்பின்றி நீர்த் தேக்கங்கள் திறந்து விடப்பட்டபோது, மலையகத்தை ஊடறுத்து காட்டாற்று வெள்ளம் படையெடுத்தது.

கனமழையினால், உறுதியிழந்திருந்த மலையகத்தில் மண் சரிவுகள் ஏற்பட்டன. அதன் விளைவு மத்திய மலைநாடு பேரழிவுப் பூமியாகியது, கண்டி மாவட்டம் வரலாறு காணாத அனர்த்தங்களைச் சந்தித்தது.

இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின்படி 639 பேர் உயிரிழந்திருக்கின்றனர். 192 பேர் காணாமல் போயிருக்கின்றனர்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 வீதமான மக்கள், அதாவது 20 இலட்சம் பேர் இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இயற்கைப் பேரழிவுகள் இலங்கையைத் தாக்கியிருக்கின்றன.

1978 நவம்பரில் மட்டக்களப்பைத் தாக்கிய சூறாவளி கிழக்கைத் துவம்சம் செய்தது. கிட்டத்தட்ட 175 தொடக்கம் 220 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கிய அந்த சூறாவளியினால், 915 பேர் உயிரிழந்தனர். 10 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்.

2004ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதிகளை சுனாமிப் பேரலைகள் தாக்கியபோது, 31,229பேர் உயிரிழந்தனர், 4,093பேர் காணாமல் போயினர், 21,411பேர் காயம் அடைந்தனர்.

பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்திய சுனாமியைவிட அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது இந்த டிட்வா சூறாவளி. இது சுனாமியைவிட மூன்று மடங்கு பாதிப்புகளை ஏற்படுத்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சுனாமியால் கிட்டத்தட்ட ஒன்றரை தொடக்கம் இரண்டு பில்லியன் டொலர் வரை இழப்புகள் ஏற்பட்டதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

ஆனால் தற்போதைய அனர்த்தங்களால் ஏற்பட்ட இழப்பு சுமார் ஆறு தொடக்கம் 7 பில்லியன் டொலர்வரை இருக்கும் என கணிக்கப்பட்டிருக்கிறது.

சுனாமிப் பேரலைகள் கரையோரப் பகுதிகளை மாத்திரம் தாக்கின, இந்த டிட்வா புயல் முழு நாட்டையும் தாக்கியிருக்கிறது.
மொத்தமுள்ள 25 மாவட்டங்களில் 22 மாவட்டங்களை அனர்த்தம் பாதித்த பிரதேசங்களாக அறிவித்திருக்கிறது அரசாங்கம். அந்தளவுக்கு இது பரந்துபட்ட சேதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 வீதமானோருக்கு இது பாதிப்புகளை ஏற்படுத்தி விட்டுப் போயிருக்கிறது. இந்த அனர்த்தம் இலங்கைக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இது பொருளாதார ரீதியாக ஏற்படுத்தி இருக்கின்ற தாக்கங்கள், குறைவாக மதிப்பிடக் கூடியவை அல்ல. அவற்றை முழுமையாக மதிப்பிடுவதற்குக் காலம் செல்லும்.

ஒவ்வொருவரின் வாழ்வியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. அந்தத் தாக்க மதிப்பீடுகளை இலகுவாக முன்னெடுக்க முடியாது.

ஒரு தொழிலை இழந்தவர் தனது தொழிலை மீட்டு இயல்பு நிலைக்குத் திரும்பும்வரை அதன் தாக்கம் நீடிக்கும்.

நிலச்சரிவுகளில் தங்கள் நிலங்களை இழந்தவர்கள் புதிய இடத்தில் தங்களது வாழ்க்கையைத் தொடங்கி நடத்தும்வரை அதன் தாக்கத்தை உணருவார்கள்.

உயிரிழப்பு மற்றும் பிற இழப்புகளைச் சந்தித்தவர்களுக்கு, அதில் இருந்து மீளுவதற்கு நீண்ட காலம் செல்லும். எனவே, இந்தப் பேரழிவுப் பெறுமானத்தை அவ்வளவு இலகுவாகக் கணித்துவிட முடியாது.




பொருளாதாரக் கணிப்பீடுகள் மிகமிக அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

சாதாரணமாக ஒரு நாட்டில் ஒரு பேரழிவு நிகழ்ந்தாலே அதிலிருந்து மீள்வது கடினம்.

இலங்கை, தொடர் பிரச்சினைகளிலும் நெருக்கடிகளிலுமிருந்து மீண்டுவரும் சூழலில், இந்தப் பேரழிவு நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது.

போருக்குப் பின்னர் மீண்டெழத் தொடங்கியபோது பொருளாதார நெருக்கடி நாட்டைப் பெரும் பாதாளத்துக்குள் தள்ளியது. அந்த நெருக்கடியிலிருந்து மீளத் தொடங்கியிருக்கின்ற சூழலில் இந்தப் புயல் மீண்டும் நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளிவிட்டிருக்கிறது.

இது நாட்டின் விவசாயக் கட்டமைப்புகளை, தொழில் கட்டமைப்புகளை, சுற்றுலாத் துறையை, கல்வி மற்றும் அத்தனை அபிவிருத்திக் கட்டமைப்புகளையும் சீர்குலைத்திருக்கிறது.

இதனைச் சரிப்படுத்துவதற்கு மிகப்பெரிய நிதி தேவைப்படும்.

அரசாங்கம் இதனைச் சமாளிக்கக்கூடிய திறனைக் கொண்டிருக்கவில்லை என்பது திண்ணம். இதுபோன்ற ஒரு பெரும் நெருக்கடியை அது தனித்துச் சமாளிப்பது சாத்தியமற்றது.

சர்வதேச சமூகத்தின் ஆதரவு மற்றும் அனுசரணை இல்லாமல் இந்த நெருக்கடியிலிருந்து அரசாங்கத்தினால் மீளுவது கடினம்.

ஏற்கனவே சர்வதேச சமூகம் இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

2028ஆம் ஆண்டு தொடக்கம் கடனை திருப்பிச் செலுத்த இலங்கை இணங்கி இருக்கிறது. இந்தச் சூழலில் மீண்டும் சர்வதேச சமூகத்திடம் போய் கையேந்த வேண்டிய நிலையில் நாடு இருக்கிறது.

பேரழிவைக் காரணம்காட்டி கடனை திருப்பிச் செலுத்தும் கால எல்லையை பிற்போடுவது மாத்திரம் தற்போதுள்ள சிக்கல் அல்ல.

இழந்துபோன கட்டமைப்புகளை மீள அமைப்பதும் அவசியம். அதற்கான சூழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏனென்றால் உட்கட்டமைப்புகளும் ஏனைய கட்டமைப்புகளும் சீர்படுத்தப்பட்டால்தான் இலங்கை தனது பொருளாதாரத் தளத்தை மீளக் கட்டிஎழுப்ப முடியும். இல்லாவிட்டால் அது இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்குப் பல ஆண்டுகள் செல்லும்.

தற்போதைய சூழலில் நாட்டை மீளக்கட்டி எழுப்புவதற்கான பெரும் நிதியைத் திரட்டுவதும் கடனை மீளத் திருப்பி செலுத்துவதற்கான கால எல்லையைப் பிற்போடுவதும் அரசாங்கத்திற்கு உள்ள முக்கியமான சவால்களாக இருக்கப் போகிறது.

இந்தச் சவால்களை கூட்டாக இணைந்து எதிர்கொள்வதுதான் புத்திசாலித்தனம். அரசாங்கம் ஏனைய கட்சிகள் தரப்புகளுடன் ஒருங்கிணைந்து இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

முன்னொரு போதும் ஆட்சியில் இருந்திருக்காத கட்சி தற்போது ஆட்சிக்கு வந்திருக்கிறது. இது நிலைமையைச் சமாளிக்கக் கூடியளவுக்கு திறமையான ஒன்று என நிரூபித்திருக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இப்படியான சூழலில் பிற தரப்புகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது முக்கியம்.

ஆனால் ஜேவிபியும் சரி, தேசிய மக்கள் சக்தியும் சரி அத்தகைய போக்குடன் ஏனைய தரப்புகளையும் அரவணைத்துச் செல்லுகின்ற நிலைக்கு அன்னும் வரவில்லை.

அரசாங்கத்தின் இந்தப் போக்கு எதிர்க் கட்சிகளின் விமர்சனங்களை மாத்திரம் ஏற்படுத்தப் போவதில்லை.

பொருளாதார நெருக்கடியையும் தற்போதைய பேரழிவிலிருந்து மீளுகின்ற சவால்களையும் சந்திக்கின்ற மக்கள் மத்தியில் அச்சத்தையும் தோற்றுவித்து இருக்கிறது.

ஓர் அரசாங்கம் இழைக்கக் கூடிய எந்தத் தவறும் முழு நாட்டையுமே பாதிக்கும்.

விளம்பரம்
VLAMBARAM™

35ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# லிபரல் கட்சி...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

புதிதாக பழமைவாதக்கட்சியில் இருந்து விலகி லிபரல் கட்சிக்குச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மைக்கல் மா உடன் சேர்ந்து தற்போது லிபரல் கட்சிக்கு 171 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளனர். கனடிய நாடாளுமன்றத்தில் 343 உறுப்பினர் உள்ளனர். இதனால் அறுதிப் பெரும் பான்மையைப் பெற லிபரல் கட்சிக்கு 172 உறுப்பினர் தேவை. அதாவது நாடாளுமன்றத்தில் லிபரல் கட்சி பெரும்பான்மையைப்பெற இன்னும் ஓர் உறுப்பினர் தேவை.

### கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் நிலை:

| கட்சி | உறுப்பினர் |
|---|---|
| லிபரல் கட்சி | 171 |
| பழமைவாதக்கட்சி | 141 |
| புளக்குவிபெக்குவாகட்சி | 22 |
| புதிய ஜனநாயகக்கட்சி | 7 |
| பசுமைக்கட்சி | 1 |
| வெற்றிடம் | 1 |
| மொத்தம் | 343 |

நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினரைக் கொண்டுள்ள பசுமைக்கட்சி உறுப்பினராக இருக்கும் Elizabeth May லிபரல் அரசு கொண்டுவரும் சட்டமூலத்தை தனித்து வாக்களிப்பதன் மூலம் நிறைவேற்றக் கூடிய தகைமையைக் கொண்டவராகத் திகழ்கிறார் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பழமைவாதக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் Todd Doherty தனது சமூக



Pierre Poilievre with a group of people includes Michael Ma
Thanks: Todd Doherty/X

ஊடகப்பதிவில் மைக்கல் மா வேறு சில பழமைவாதக்கட்சி உறுப்பினருடன் சேர்ந்து பியர் பொலியவ் உடன் நிற்கும் படம் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் மைக்கல் மா பழமைவாதக்கட்சியில் இருந்து விலகுவதற்கு முதல்நாள் பியர் பொலியவ் உடன் பழமைவாதக்கட்சியின் விடுமுறைகால இரவு விருந்தில் கலந்து கொண்டிருந்தார் எனத் தெரிவித்திருந்தார்.




Michael Ma - MP Markham-Unionville
Thanks: mpmichaelma.ca

கனடியப் பிரதமர் மார்க் காணி லிபரல் கட்சியின் விடுமுறை கால இரவு



Prime Minister Mark Carney with MP Chris d'Entremont
Thanks: CBC / The Canadian Press

விருந்தில் டிசெம்பர் 11ஆம் திகதி கலந்து கொண்டு உரையாற்றுகையில், லிபரல் கட்சியில் புதிதாக இணைந்துகொண்ட மைக்கல் மா ஐ லிபரல் கட்சி உறுப்பினர் களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அப்போது அவர், "உங்களில் சிலர் வாழ்நாள் முழுவதும் லிபரல் கட்சியினைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்கள். நான் உங்களை மதிக்கின்றேன். மற்றும் சிலர் என்னைப்போல் தற்போது அரசியலுக்கு



Canadian Prime Minister Mark Carney arrives on Parliament Hill
Thanks: Spencer Colby / The Canadian Press via AP

வந்தவர்களாக இருக்கலாம். இன்னும் சிலர் புதிதாக எமது கட்சிக்கு வந்திருக்க லாம், குறிப்பாக இன்று எமது கட்சியில் சேர்ந்திருக்கலாம் மைக்கல் மா ஐப்போல" எனக் கூறி மைக்கல் மா ஐ மேடைக்கு அழைத்து லிபரல்கட்சியினருக்கு அறிமுகம் செய்துவைத்தார். அப்போது சபையில் இருந்தோர் எழுந்துநின்று



Member of Parliament Chris d'Entremont joined the government side of the House
Thanks: Sean Kilpatrick/The Canadian Press

கைதட்டி மைக்கல் மா வை வரவேற்றனர். நாடாளுமன்றத்தின் இலையுதிர்கால அமர்வு முடிந்த சில மணிநேரத்தின் பின்பே மைக்கல் மா பழமைவாதக் கட்சியிலிருந்து விலகி லிபரல் கட்சியில் சேர்ந்தார். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் எல்லோரும் தங்களது தொகுதிக்குத் திரும்பிச் செல்வர். நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு ஆறுவார கால விடுமுறையின் பின்னர் ஜனவரி 2026இல் ஆரம்பமாகும்.

நாடாளுமன்றத்தில் இலையுதிர்கால



அமர்வு முடிவடையும் முன்னர் இறுதி நிகழ்வாக பசுபிக் சமுத்திரத்திற்குப் புதிய எண்ணெய்க்குழாய் பாதை அமைக்கக் கோரும் பழமைவாதக்கட்சித் தலைவர் பியர் பொலியவ்இனுடைய தீர்மானத்தை லிபரல் அரசு எதிர்த்து வாக்களித்தது. இவ்வாக்களிப்பில் லிபரல் கட்சியினருடன் சேர்ந்து புளக் குவிபெக்குவா, புதிய ஜனநாயகக்கட்சி மற்றும் பசுமைக்கட்சி உறுப்பினர் வாக்களித்திருந்தனர்.



Conservative Leader Pierre Poilievre
Thanks: Spencer Colby / The Canadian Press via AP

பழமைவாதக் கட்சியின் தீர்மானம் 139 இற்கு 196 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

இவ்எண்ணெய்க்குழாய் அமைத்தல் லிபரல் கட்சி அரசு அல்பேட்டா முதல்வர் டானிஎல் ஸ்மித் உடன் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்தாலும், பழமைவாதக்கட்சித் தலைவர் அப்புரிந் துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக தீர்மானமாகக் கொண்டுவராமல் அதில் உள்ள தொழில்துறை கார்பன் வரி (Industrial Carbon Tax) மற்றும் மெதேன் வாயுக் குறைப்பு போன்ற அல்பேட்டா முதல்வர் ஒப்புக்கொண்ட சில சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான தீர்வைத் தவிர்த்து புதிய எண்ணெய்க் குழாய் அமைப்பதை மட்டுமே தனது தீர்மானத்தில் முன்வைத்திருந்தார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதமர், "புரிந்துணர்வு ஒப்பந்தம் அதில் உள்ள பல பகுதிகளின் கூட்டுத்தொகை அல்ல, அதை முழுமையாகவே சமர்ப் பிக்க வேண்டும். அதில் உள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் மட்டுமே பியர் பொலியவ் ஆதரிக்கும் எண்ணெய்க்குழாய் வழி தொடரும். உங்களுக்குப் பரிமாறப்படும் உணவில் நீங்கள் விரும்பிய சிறு பகுதியை மட்டும் சாப்பிடாமல் முழு உணவையும் உண்ண வேண்டும்" என்றார்.


வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS
சமூக உளவளம் பேணும் தொடர் - 106
Psychosocial Educational Series-106
VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

15 December 2025 (Monday)
Canada EST: 7:00pm - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

நாட்பட்ட நோய்களை நிர்வகித்தல்
Managing the Chronic Illness



Shanthalojiny Umaharan
MBBS : University of Jaffna
MSc community Health: University of Toronto

ஒவ்வொரு முதலாம் மூன்றாம் திங்கட்கிழமைகளில் எங்களுடைய சூம் தொடரில் இணைந்துகொள்ளுங்கள்

Join us via zoom: CLICK HERE or go to link below in the email



Hosted by
Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA



MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340 .9490 / 416.732.2228



Mr.S.F.Xavier
(Teacher)

Vlambaram - December 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-14 5:56 PM Page 6



# மாகாண சபைத்தேர்தலுக்குத் தயாராகும் தமிழ்க் கட்சிகள்

## – முகிலன் –

மாகாண சபைத் தேர்தல்தான் தமிழ் அரசியல் கட்சிகளின் அடுத்த இலக்கு.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் இலங்கை அரசாங்கம் ஆர்வம் காட்டவில்லை. கடைசியாக 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் 20ஆம் திகதி ஊவா மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. அதன் பின்னர், எந்த ஒரு மாகாண சபைகளுக்கும் தேர்தல் இடம்பெறவில்லை.

இந்தத் தேர்தல்கள் முடங்கிப் போனதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம்.

ஒன்று, ஆட்சியிலிருந்த, இருக்கின்ற கட்சிகளுக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் விருப்பமின்மை. மாகாண சபைக் கட்டமைப்பை விரும்பாத அரசியல் கட்சிகள், அதனை இப்படியே தேய்ந்துபோக விடுவதற்கு விரும்புகின்றன.

இன்னொன்று, 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் அறிமுகப்படுத்திய மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம்.

மாகாண சபைத் தேர்தல்களை இதுவரை நடத்திய விகிதாசார முறைக்குப் பதிலாக, கலப்பு முறையில் நடத்துவதற்கு இந்தச் சட்டத் திருத்தம் முன்மொழிந்திருந்தது.

மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லைகளை வகுக்கவேண்டி இருந்தது. அந்த எல்லை நிர்ணயம் குழப்பத்தில் முடிந்து போனதால், மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

மாகாண சபைகளையே, அதிகாரப் பகிர்வு கோரிக்கையின் எச்சமாக இருப்பதாக தமிழ் கட்சிகள் பலவும் நம்புகின்றன.

இந்தியா இதனையே தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக முன்வைத்தது. இப்போதும் அதனையே வலியுறுத்துகிறது. ஆனால் தமிழ்த் தேசிய கட்சிகளைப் பொறுத்தவரையில் மாகாண சபைகளைக் கைவிடவும் தயார் இல்லை, இதனை இறுதித் தீர்வாக ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை.

மீளப் பெற முடியாத அதிகாரங்களுடன் கூடிய சமஷ்டி அதிகாரப் பகிர்வு ஒன்றையே, தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர்பார்க்கின்றன.

தமிழ் மக்களின் அபிலாசைகளாக அதுவே முன்னிறுத்தப்படுகிறது.

ஒவ்வொரு தேர்தல்களின்போதும் தமிழ்த் தேசிய கட்சிகள் இதனை முன்னிறுத்தியே வாக்குகளைக் கேட்கின்றன.

தமிழ் மக்களும் அதனை உறுதிப்படுத்தி ஆணை வழங்கி வருகின்றனர்.

மாகாண சபைகளை இந்தியா தீர்வாக முன்வைத்ததால், தெற்கில் உள்ள பேரினவாதிகள் பலருக்கு இது விரும்பத்தகாத ஒன்றாகத் தெரிகிறது. அதனைவிட, தமிழருக்கு எந்த ஓர் அதிகாரப்பகிர்வு கட்டமைப்பும் இருக்கக் கூடாது என எதிர்பார்க்கின்ற அவர்கள் இதனை முழுமையாக எதிர்க்கிறார்கள்.

மாகாண சபைகளை வெள்ளை யானை என்றும் கூறும் இவர்கள், இதுவரை காலமும் மாகாண சபைகள் தெரிவு செய்யப்படாமல் நிர்வாகம் நடத்தப்பட்டதை சுட்டிக்காட்டி, இந்தக் கட்டமைப்பு இப்படியே அழிந்து போய்விட வேண்டும் என வலியுறுத்துகின்றனர். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் மாகாண சபை ஒரு முக்கியமான தேவையாக இருக்கிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைகளை தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற அதேவேளை இதனை வலியுறுத்துவதற்கும் தயாராக இல்லை. ஆனால் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டால், அதற்குப் போட்டியிடுவதற்குத் தயாராக இருக்கிறது.

ஆக தமிழர் தரப்பில் யாருமே மாகாண சபைகளை எதிர்ப்பதற்குத் தயாராக இல்லை.

மாகாண சபைகளுக்கான தேர்தல் எப்போது நடக்கும் என்ற கேள்விக்கு சரியான பதில் இல்லை.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடத்தப்படும் என அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தது. ஆனாலும் அந்த வாக்குறுதியில் மாறுபாடுகள் பல இருக்கின்றன.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருத்தை வெளியிட்டிருந்தனர். அதனால் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படுமா, இல்லையா என்ற சந்தேகம் நீடித்துக் கொண்டிருக்கிறது.

இப்போது பேரிடர் நிலை, தேர்தல்களை நடத்துவதற்கான சாத்தியப்பாட்டை இன்னும் பின்நோக்கித் தள்ளியுள்ளது.

இந்தச் சூழலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மாகாண சபைத் தேர்தல்களையும் 13ஆவது திருத்தச்சட்ட அமலாக்கத்தையும் வலியுறுத்துவதற்காக, ஒன்றிணையத் தொடங்கியிருக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தல்வரை சேராமல் இருந்த தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும், இதற்காக ஒன்றிணைந்திருக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தலில் ஆசனங்களை வெற்றி கொள்வதற்காக, சபைகளில் ஓரிரண்டையாவது கைப்பற்றிக் கொள்வதற்காக, அகில இலங்கை தமிழ்க் காங்கிரசுடன் கொள்கை கூட்டு வைத்துக் கொண்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, இப்போது தமிழரசுக் கட்சியுடன் கூட்டாக இணைந்து செயற்பட முடிவு செய்திருக்கிறது. இது இன்னமும் அரசியல் கூட்டாக உறுதிப்படுத்தப்படவில்லை.

மாகாண சபைகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், அரசியல் கூட்டணி அமைக்கப்படுவது தொடர்பாக பேசப்படும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருக்கிறார். தேர்தல்களை இலக்கு வைத்தே இப்பொழுது இந்தக் கூட்டுக்கு அத்திவாரம் இடப்பட்டிருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை, விலக்கி வைத்து விட்டு தனித்துப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி, மாகாணசபைத் தேர்தலுக்கு அந்தக் கட்சியை அணைத்துக் கொள்ள முயற்சிக்கிறது.

தமிழரசுக் கட்சியினால் தனித்து நின்று மாகாண சபையில் ஆட்சி அமைக்க முடியாது. அதனால் பெரியதொரு கூட்டு ஒன்றை உருவாக்கி வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கிறது.

மாகாண சபைத் தேர்தலை தமிழரசுக் கட்சி இலக்கு வைப்பதற்கு பிரதான காரணம் ஒன்று இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடப் போவதாக ஏற்கனவே அறிவித்திருக்கிறார். கட்சி விரும்பினால் தான் போட்டியிடுவேன் என அவர் கூறியிருந்தார்.

தமிழரசுக் கட்சி போட்டிக் களத்துக்குள் ஏற்கனவே நுழைந்து விட்டது என்பதே உண்மை.

மாகாண சபைத் தேர்தல் போட்டிக் களத்தில் இறங்கிவிட்ட தமிழரசுக் கட்சி, அதற்காக கள வேலைகளை செய்யத் தொடங்கியிருக்கிறது.

அதன் ஒரு கட்டம்தான், ஜனநாயக தமிழ் பேசிய கூட்டணியுடன் தொடங்கப்பட்டுள்ள பேச்சுக்கள். இணைந்து செயல்படுவதற்கு உருவாக்கப்பட்டுள்ள இணக்கப்பாடும் அதற்கானதே.

மாகாண சபை தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் போன்ற கட்சிகளுடன் முட்டி மோதுவதற்கு சுமந்திரனுக்கு ஒரு வலுவான கூட்டணி தேவைப்படுகிறது.

இதற்காக மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவது அவருக்கு இன்னும் பாதுகாப்பானது. அதனை நோக்கியே அவர் இப்பொழுது காய்களை நகர்த்துகிறார்.

மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படுமா? இல்லையா? என்ற கேள்விக்கு இன்னமும் விடை கிடைக்காத நிலையில், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இந்த நகர்வுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இலங்கைத்தீவு அண்மையில் சந்தித்த பேரிடர், பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்தப் பாதிப்புகள், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை பிற்போடுவதற்குத் துணைபோகலாம்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை என்று கை விரித்ததுபோல, அந்த முன்னுதாரணத்தைக் காட்டி அனுரகுமார திசாநாயக்கவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு காலத்தை இழுத்தடிக்க வாய்ப்புள்ளது.

தற்போதைய பேரிடர் பாதிப்புகளால் உண்மையிலேயே அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடி இருக்கவே செய்யும். அதைவிட அரசாங்கத்துக்கு தேர்தலை நடத்துவதற்கும் விருப்பம் இல்லை.

இது, மாகாண சபைத் தேர்தல்களுக்கு எதிரான சூழலை இன்னும் வலுப்படுத்தியிருக்கிறது என்றே கூறலாம்.



# ஏவிஎம் சரவணனின் வெளிவராத கதைகள் – முக்தா ரவி

## நேர்கண்டவர் : கண்ணன்

AVM என்ற மூன்று எழுத்துக்களைத் தவிர்த்துவிட்டு தமிழ் சினிமா சரித்திரத்தைப் பேச முடியாது. இந்தியாவில் திரைப்படம் அறிமுகமானபோதே திரையுலகில் நுழைந்து (1931), தமிழ் உட்பட பல்வேறு மொழிகளில் திரைப் படங்களை உருவாக்கிய ஏ.வி. மெய்யப்பன் அவர்களால் உருவாக்கப்பட்ட நிறுவனம், ஏவிஎம். ஏ.வி. மெய்யப்பன் காலத்தில் அவருக்குத் துணையாகவும், அவருக்குப் பின்னால் தனியாகவும் ஏவிஎம் நிறுவனத்தை நிர்வகித்தவர் ஏவிஎம் சரவணன். திரைப்பட ரசிகர்களின் நாடித்துடிப்பை அறிந்து பல வெற்றிப் படங்களை தயாரித்தவர். இந்த நேர் காணலில், சமீபத்தில் மறைந்த ஏவிஎம் சரவணன் பற்றிய நினைவுகளை நம்முடன் பகிர்ந்துகொள்கிறார், ஏவிஎம் சரவணனுக்கு நெருக்கமானவரும் திரைப்படத் தயாரிப் பாளருமான முக்தா ரவி.

**கேள்வி: ஏவிஎம் சரவணன் உடனான உங்களின் நெருக்கம் பற்றிச் சொல்லுங்கள்?**

**பதில்:** தமிழ் சினிமா தயாரிப்பு என்பது ஒரு காலகட்டத்தில் ஏவிஎம் நிறு வனத்தைச் சாராமல் செய்ய முடியாது என்ற நிலைதான் இருந்தது. உதாரண மாக ஏவிஎம்மில் தான் 'ரிக்கார்டிங்' நடக்கும், 'எடிட்டிங்' நடக்கும் 'சூட்டிங்' நடக்கும். இதெல்லாம் இல்லையென்றால் அவர்கள் 'லேபரட்டரி'யில பிரிண்ட் எடுக்க வேண்டியதாக இருக்கும். அவர்கள் சரஸ்வதி ஸ்டோர்ஸ் என்று ஒன்றை நடத்தி வந்தனர். அதில் பாடல்களைப் பதிவுசெய்து ஒலிப்பரப்புவார்கள். அதன் மூலம் எங்களைப் போன்ற தயாரிப்பாளர் களுக்கு 'ராயல்டி' வரும். இப்படி முக்தா ஃபிலிம்ஸ் தயாரிக்கும் படங்களுக்காக எங்கள் தந்தை முக்தா ஸ்ரீனிவாசன் காலத்திலிருந்து ஏவிஎம் நிறுவனத்தைச் சார்ந்தே இருந்தோம். அந்தவகையில் சிறு வயது முதலே எனக்கு ஏவிஎம் சரவணனுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. 1954இல் சிவாஜியின் 'அந்த நாள்' படத்தில் என் அப்பா பணிபுரிந்தார். நாங்கள் சிறு வயது. எங்கள் அப்பாவுடன் ஏவிஎம் ஸ்டுடியோ செல்வோம். அப்பாவும் அவரும் பேசிக் கொண்டு இருப்பார்கள். நாங்கள் குழந்தைகள் எல்லோரும் ஒன்றாக விளையாடிக்கொண்டிருப்போம். அப்படியே வளர்ந்த பின்னும் அந்த



உறவு தொடர்ந்தது. சரவணனின் மறைவை எங்கள் உறவினர்களில் ஒருவரின் மறைவு போன்றுதான் பார்க்கிறோம்.

**கேள்வி: சிறுவயது முதலே பழகி வருபவர் என்ற அடிப்படையில் கேட்கிறோம், அவர் உங்கள்மீது செலுத்திய தாக்கம் என்ன?**

**பதில்:** ஒரு நிறுவனத்துக்கு அதன் நிர்வாகியைப் பார்க்கச் சென்றால், அவர் அவருக்கான அறையில் இருப்பதைத் தானே பார்த்திருக்கிறோம். ஆனால், சரவணன் அவரது அறையிலேயே இருக்க மாட்டார். ஏவிஎம் ஸ்டுடியோவில் எங்காவது இருப்பார். அல்லது அவரைச் சந்திக்க வந்தவர்களுடன் ஏதாவது ஒரு மரத்தின் அடியில் கைக்கட்டி பேசிக் கொண்டிருப்பார். ஏவிஎம் சரவணன்போல் ஓர் எளிய மனிதனைப் பார்க்க முடியாது. யாரிடமும் கோபப்பட மாட்டார். யாருக்கும் ஒரு தொந்தரவு தரக்கூடாது என நினைப்பார். அவர் பழகும் தன்மையே நமக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். என்னை விடுங்கள் ஜெயலலிதா, ரஜினி, கமல் போன்றவர்களிடமும் சரவணனின் தாக்கம் உண்டு. ஏவிஎம்மில் வேலை பார்த்த தொழில்நுட்ப கலைஞர்கள் அங்கிருந்து வெளியேறத் தயங்குவார்கள். அந்தளவு அவரது தாக்கம் இருக்கும்.

**கேள்வி: ஏவிஎம் நிறுவனத்தின் உருவாக் கத்தில் சரவணனின் பங்கு என்ன?**

**பதில்:** ஏவி மெய்யப்ப செட்டியார் இருக்கும்போதே சரவணன் அவருக்குத் துணையாகப் பணியாற்றினார். அதற்குப் பிறகு தனியாக அதை வளர்த்தெடுத்தார். ஒரு படத்தில் மதுரை கோயில் காண்பிக்க வேண்டும் என்றால் அதற்காக மட்டும் மதுரை செல்ல முடியாது. ஏவிஎம் சென்றால் தயாராக வைத்திருப்பார்கள். அதை வாங்கி வந்து நம் படத்தில் சேர்த்துக்கொள்ளலாம். இதுபோல் குதிரை உட்பட என்ன துண்டுக் காட்சி வேண்டும் என்றாலும் அங்கே கிடைக்கும். அதை ஒரு நிறுவனம் என்று சொல்வதா அல்லது பல்கலைகழகம் என்று சொல்வதா, தெரியவில்லை. வாழை இலையிலிருந்து நார் வரை உபயோகமானதாக இருக்கும் அதே போல் ஏவிஎம் நிறுவனமும். அங்கு எல்லாம் கிடைக்கும் என்ற நிலையை ஏவிஎம் சரவணன்தான் உருவாக்கினார்.

**கேள்வி: ஏவிஎம் சரவணனுக்கு தொழிலாளி களுடனான உறவு எப்படி இருந்தது?**

**பதில்:** எம்.ஜி. ராமசந்திரனிலிருந்து லைட்மேன் வரைக்கும் எல்லோருடனும் பேசக் கூடியவர் ஏவிஎம் சரவணன். தனக்குக் கீழே வேலை பார்ப்பவர்கள் என்று யாரையும் நினைக்கமாட்டார். தன்னுடன் வேலை பார்ப்பவர்கள் என்றுதான் பார்ப்பார். முதலாளியாக அல்ல சக தொழிலாளியாக அவர்களுடன் பழகுவார். அவர்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால் அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வார். யாரையும் கடிந்து பேசமாட்டார். பாசத்தைக் காட்டி வேலை வாங்குவார்.

சீனிவாசன் என்ற ஒரு நபர். ஏவிஎம் நிறுவனத்தில் சமையல் கலைஞராக இருந்தவர். பின்னாட்களில் குதிரை பந்தயத்தில் பெரும் பணம் சம்பாதித்தார். அதனால் ஜாக்பாட் சீனிவாசன் என்று கூப்பிடுவர். அவர் ஒரு படம் தயாரித்து ஒரு சிக்கலில் மாட்டிகொண்டார். மற்றவர்கள் என்றால், நம் சமையல்காரன் தானே என்று அதைக் கண்டுகொள்ளா மல் விட்டுவிடுவார்கள். ஆனால், ஏவிஎம் சரவணன் தலையிட்டு அதைச் சரிசெய்து கொடுத்தார். எங்கள் அப்பாவுக்கும் அதில் பங்குண்டு என்பதால் அந்த விவகாரம் எனக்கு நன்கு தெரியும்.

லக்ஷ்மி நாராயணன் என்ற ஓர் அசோசியேட் டைரக்டர். அவர்தான் எங்க அப்பாக்கு நிறைய விடயங்கள் கற்றுக் கொடுத்தவர். அவர் நிறைய இயக்குநர் களுடன் வேலை பார்த்துள்ளார். ஆனால், வெளியே போகவில்லை. ஏவிஎம்முடன் நிறுத்திக்கொண்டார்.

எஸ்.பி. முத்துராமன் வெளிப்படங்கள் பண்ணினாலும் ஏவிஎம்தான் அவருக்குத் தாய் வீடு. முத்துராமனுக்கு இப்போதும் அங்கு தனி அறை இருக்கிறது. சரவணன் அப்படி பாசமும் மரியாதையுடனும் அவரிடம் நடந்துகொள்வார்.

தமிழ் சினிமாவில் ரஜினிக்கு ஒரு தனி அடையாளத்தைக் கொடுத்த படம் 'முரட்டு காளை'. இந்தப் படம் ஏவிஎம் தயாரித்தது. ஆனால், அதற்கு முன்பே எத்தனை படத்திற்காக ஏவிஎம் ஸ்டுடியோ வந்திருப் பார் ரஜினி. அப்போதே, ஒரு இரண்டாம் நிலை நடிகர்தானே என்று பார்க்காமல், அவரை மதித்து நடத்தி இருப்பார். அதனால்த்தான் சரவணன் காலமானார் என்றதும் முதல் ஆளாக ஓடி வந்தார் ரஜினி.

ஜெய்சங்கர் அதிகமான படங்கள் நாயகனாக நடித்திருந்தார். இந்நிலையில் ஏவிஎம் சரவணன் சொன்னார் என்பதற் காக வில்லனாக நடித்தார். அதன்பிறகு ஐம்பது படங்களுக்கு மேல் வில்லனாக நடித்திருக்கிறார்.

**கேள்வி: அவர் கோபப்பட்டு நீங்கள் பார்த்திருக்கிறீங்களா?**

**பதில்:** ஏவிஎம் ஸ்டுடியோவில் எங்கு பார்த்தாலும் படப்பிடிப்பு நடந்துகொண்டு இருக்கும். சில நேரங்களில் அவர் வீட்டுக்குப் பக்கத்தில், கேட்டால் அவர் வீட்டில்கூடப் படப்பிடிப்புக்கு அனுமதிப்பார். பணத்துக்காக இல்லை, நட்புக்காக. கோபப்பட மாட்டார்.

**கேள்வி: முதல் படத்திலேயே அவருக்குத் தேசிய விருது கிடைத்தது. விசுவின் 'சம்சாரம் அது மின்சாரம்' படத்தில் மனோரமா பாத்திரம் முதலில் இல்லை. இவர் சொன்ன பிறகுதான் சேர்க்கப்பட் டது, அதுவே அந்தப் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகவும் இருந்தது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். கதை சம்பந்தமான ஞானம் அவருக்கு எந்தளவு இருந்தது?**

**பதில்:** சினிமாவில் எல்லா பகுதிகளிலும் அவர் கவனம் இருந்தது. இசை, ஆன்மிகம், இலக்கியம் எல்லாவற்றிலும் அவருக்கு அறிவு உண்டு. ஓடாத படத்தை யும் சரிசெய்து ஓட வைப்பார். அப்படித் தான், ஏற்கனவே வெளியாகி ஓடாத படத்தின் கதையைக் கொஞ்சம் மாற்றி, மனோரமாவை சேர்த்து, விசுவை வைத்து 'சம்சாரம் அது மின்சாரம்' படம் எடுத்தார். அது தமிழில் மட்டுமல்லாமல் பல மொழி களில் வெளியாகி எல்லா மொழிகளிலும் பெரிய வெற்றி பெற்றது. அந்தப் படத்துக் காக ஒரு வீடே கட்டினார். ஏவிஎம் ஸ்டுடியோவில் இப்போதும் அந்த வீட்டை 'சம்சாரம் அது மின்சாரம்' செட் என்றுதான் சொல்வார்கள்.

**கேள்வி: ஒரு திரைப்படத் தயாரிப்பாளராக நீங்கள் ஏவிஎம் சரவணனிடமிருந்து கற்றுக்கொண்டது என்ன?**

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

Get in touch for your perfect home!

PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215

# நாமும் நமது இல்லமும் 691

## இளம் கனடியர்கள் வாடகை ஆதனத்தையே அதிகம் விரும்புகின்றனர்



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடா முழுவதும் வாடகையாளர்களின் சராசரி வயது 32. ரொறொன்ரோ போன்ற நகரங்களில் இது 34 வயதிற்கு நெருங்குகிறது.

கனடாவில் வாடகைக்கு ஆதனம் எடுத்து இருப்போரின் சராசரி வயது அதிகரித்து வருவதோடு, இன்றைய பொருளாதாரச் சூழலில் ஆதனத்தை வாங்குவதில் கனடியர்கள் அதிகமாக பின்நோக்கிச் செல்கின்றனர் என இரண்டு புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

Single Key எனும் வாடகையாளர் சேவை சமூக ஊடகத்தளம் வெளியிட்ட தரவுகளின்படி, கனடாவின் வாடகையாளர்களின் சராசரி வயது இப்போது 32. ரொறொன்ரோ போன்ற பெரிய நகரங்களில் இது 34 வயதிற்கு அருகாமையில் உள்ளது. இது Single Key நிறுவனம் வாடகையாளர்களின் சராசரி வயதை முதன்முறையாகக் கணக்கிட்டது. இதற்கிடையில் டிசெம்பர் 04, 2025இல் வெளியான ஸ்கோஷியா வங்கியின் (Scotia Bank) ஆய்வில் மனை, ஆதனம் வாங்க விருப்பமுள்ளோரில் 62% பேர் இன்றைய பொருளாதார நிலைமையின் பாதிப்பால் மனை, ஆதனம் வாங்கும் திட்டத்தைத் தாமதப்படுத்தி வருவதாகத் தெரிவித்தனர்.

ரொறொன்ரோ ஆதன விற்பனைப் பிரதிநிதி ஒருவர் கூறுகையில், “கனடாவின் வீட்டு விலை சரிவு காரணமாக ‘வீட்டின் விலை எப்போதும் உயர்வதே வழக்கம்’ (House price will go up) என்ற நம்பிக்கையை கனடியர்கள் இழந்துவிட்டதால் பலர் தங்கள் வாழ்க்கையில் மேலும் நீண்ட காலம் வாடகையில் தங்குவதற்குத் தயார் நிலையிலுள்ளனர்.”

கடந்த இரண்டு, மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் முன்பு சந்தையில் நுழையாதவர்கள் இப்போது நிதியியல் ரீதியாக முன்னிலையில் உள்ளனர். இது கடந்த பத்து (10) வருடங்களில் நடந்ததே இல்லை என்பது உண்மை.

இதன் விளைவாக வாங்குவோர் இப்போது வாடகையில் நீண்டகாலம் இருந்து “காத்திருந்து பார்ப்போம்” என்ற அணுகுமுறையை எடுத்துள்ளனர்.

“சந்தையில் நுழையாததே நமக்கு நல்லதாயிற்று” எனப் பலர் இப்பொழுது உணரத் தொடங்கியுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.



Single Key மற்றும் Scotia bank வெளியிட்ட தரவுகள்

கனடாவின் முக்கிய வீட்டுச் சந்தைகள் தற்போது ஏன் மந்தநிலையிலிருக்கின்றன என்பதைக் காட்டுகின்றது.

ஆதன விலைகள் கொரோனோ பெருந்தொற்றுநோய் கால உச்சத்திலிருந்து குறைந்திருந்தாலும் கனடா மத்திய வங்கியின் வட்டி வீதக் குறைப்பு சுழற்சி, ஏறக்குறைய முடிவடைந்துவிட்டதாகச் சுட்டிக்காட்டினாலும் ஆதனச் சந்தை இன்னும் உயிர்ப்பு அடையவில்லை.

இதற்கிடையில் ரொறொன்ரோ மற்றும் வன்கூவர் போன்ற நகரங்களில், வாடகைத் தொகை நான்கு ஆண்டுகளில் குறைந்த நிலைக்கு வந்துள்ளது. வாடகையில் இருப்பதே இன்னும் நல்ல நிகழ்வாக மாறியுள்ளது.

Single Key தலைமைச் செயல் அதிகாரி கூறுகையில், வட்டி விகிதங்கள் இன்னும் 2022ஐ விட உயர்நிலையில் இருப்பதால் மனை, ஆதனம் வாங்குவது வாடகையில் இருப்பதைவிட அதிக செலவானதாகவுள்ளது. ஆதனம் உரிமை கொள்வதைவிட வாடகையிலிருந்தால் மாதச் செலவு ஏறக்குறைய 25% - 30% குறைவு. வட்டி வீதம் அதிகமாக இருந்தபோது இது இன்னும் அதிகமானது என்றும் அவர் கூறினார்.

எல்லாக் கனடியர்களும் விருப்பப்பட்டு வாடகையில் வாழ்வதில்லை. ஸ்கோஷியா வங்கி ஆய்வின்படி, ஆதனம் வாங்க விருப்பமுள்ளவர்களில் 53% பேர் “வீட்டு உரிமை இன்னும் எட்டாக்கனி போல்” எனத் தெரிய வருகின்றது என்கின்றனர்.

Single Key தரவுகளின்படி, சராசரி வாடகையாளரின் ஆண்டு வருமானம் $67,537.

ஆதன வாழ்வு வருமானம் சுமார் $109,000 தேவைப்படும். இந்த இடைவெளி பல வாடகையாளர்கள் வாழ்க்கையை நடத்த இணைந்து வாழ வேண்டிய நிலையைக் காட்டுகிறது. வன்கூவர் போன்ற நகரங்களில், வாடகையாளர்கள் ஆதன செலவுக்கு தங்கள் வருமானத்தின் 40%இற்கும் மேல் செலவு செய்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

ஆனால், லண்டன் ஒன்ராறியோவில் உள்ள Millen Wealth Advisors நிறுனத்தின் நிதி ஆலோசகரான ஒருவர் கூறுவதாவது; “மக்கள் இப்போது ஆதனம் வாங்குவது குறித்த தங்கள் முடிவுகளை மாற்றிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் நீண்ட காலமாக வாடகைக்கு இருப்பதற்கும் தயாராக இருக்கின்றனர். ஆதனம் வாங்கத் தேவையான பணம் இருந்தாலும் குடும்பம் ஆரம்பிப்பது போன்ற உரிய காரணங்கள் வரும்வரை காத்திருக்க விரும்புகின்றனர்.

“முன்பு ஆதன சந்தை மிகவும் கவர்ச்சியாக இருந்தது. பணம் கிடைத்தவுடன் உடனே மக்கள் மனை, ஆதனம் வாங்கி விடுவர். ஆனால், தற்போது நிலைமை அப்படியில்லை என அவர் கூறுகிறார். மேலும், இப்போது ஆதனம் வாங்குவது ஒரு தனிப்பட்ட முடிவு என மக்கள் கருதத் தொடங்கியுள்ளனர்.

“முன்பைவிட வாடகைக்கு இருப்பதில் சற்று குறைந்த வெட்க உணர்வே இப்பொழுது இருக்கிறது” எனவும் அவர் கூறுகிறார்.

ரொறொன்ரோவைச் சேர்ந்த 32வயது ரெக் (Tech) பணியாளர் ஒருவர், தனது வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்படும் இக்காலத்தில் புதிய வேலைகள், சம்பள மாற்றங்கள், உறவு மாற்றங்கள், நகர மையத்துக்கு அருகில் அல்லது தூரத்தில் வாழும் விருப்பங்கள் - இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு வாடகைதான் தனக்கு அதிக சுதந்திரத்தைத் தருவதாக நினைக்கிறார்.

அவரது சில நண்பர்கள் 20 வயதிலேயே ஒரு படுக்கையறைகொண்ட அடுக்குமனை (Condo.) வாங்கி இருந்தனர். ஆனால், சில ஆண்டுகளில் அது அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யாத சொத்தாக மாறிவிட்டது.

“இரண்டு ஆண்டுகளிலேயே அவர்கள் பெற்றோரது வீட்டிலிருந்து வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முன்பு அலுவலகம் இருந்தது. அவர்களுக்கு 600 சதுர அடியில் வாழ்வது பிடிக்கவில்லை. அதன்பிறகு அந்த மனையை வாடகைக்குக் கொடுக்க வேண்டி வருகிறது” எனத் தெரிவித்தார்.

தற்போது ரொறொன்ரோ நகர மையத்தில் அடுக்குமனை வாடகைக் குடியிருப்பில் இருக்கும் ஒருவர்; “நான் சொத்தைப் பற்றி கவலைப்படுவதற்குப் பதிலாக என் ஆலோசனை வணிகத்தை (Consulting Business) வளர்ப்பதில் கவனம் செலுத்த விரும்புகிறேன். மேலும் வாடகையாளராக இருப்பதால் சேமிதக்கும் பணத்தை எனது வியாபாரத்தில் முதலீடு செய்வதன் மூலம் நிதி ரீதியாக நான் மேலும் இலாபமடைகிறேன்” எனக் கூறுகிறார்.

ஆதனம் வாங்கும் செலவு, நிலம் மாற்றுதல் கட்டணம், மற்றைய செலவுகள் - இவை எல்லாம் சேர்ந்து பெரிதாகிவிடும்” என்கிறார். அந்தச் சூழலில் வாடகைக்கு இருப்பதே நிதி ரீதியாக நல்லது என அவர் நம்புகின்றார்.

ஸ்கோஷியா வங்கி நிறுவனத்தின் ஆதனக் கடன் துணைத்தலைவர் கூறுவது; மனை, ஆதனம் வைத்திருப்பதால் கிடைக்கும் நிலைத்தன்மை மற்றும் கட்டுப்பாடு, செயல்பாடுகள் இன்னும் மிக முக்கியமானவை.

“30 வயதிலுள்ள ஆதன உரிமையாளர்களின் நிகரப் பெறுமதி, ஆதன வாடகையாளர்களைவிட 100 மடங்கு அதிகம் என்பதை நாம் காண்கிறோம். இது முக்கியமான நிதித் தாக்கம் என்கிறார். இது சிறப்பானது.

மேலும் ஆலோசனை வணிக நிறுவனம் நடத்துபவர் ஒப்புக் கொள்கிறார். அதாவது அவரது பெரும்பாலான வாடிக்கையாளர்கள் ஒரு கட்டத்தில் ஆதனம் வாங்கும் எண்ணம் வைத்திருக்கின்றனர். அடமானக் கட்டணங்கள்மூலம் ஏற்படும் கட்டாய சேமிப்பு மற்றும் அடமானக் கடன் முற்றாகச் செலுத்தி முடித்த பிறகு வரும் மேலதிக சேமிப்பு (அதாவது மாதாந்த குறைந்த வீட்டுச் செலவு) ஆகியவை ஆதனம் வாங்குவதற்கான இரண்டு பெரிய நன்மைகள் என்றும் அவர் கூறுகிறார்.

அத்துடன் ஆதனம் வாங்குதல் என்பது நீண்டகால முதலீடு. இதனை யாரும் எவரும் மறுக்க முடியாது.

நிதி நிறுவனங்களே எமது சிறுதொகைக்கு (Down Payment) பெரிய அடமானக் கடனைத் தருவதால், ஆதன முதலீடு இலகுபடுத்தப்படுகின்றது. இவ்வாறான சிறந்த முதலீடு தவிர்க்கக்கூடாதது.

ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணையவழிக் கலந்துரையாடல்

நாள் : 19 டிசம்பர் வெள்ளிக்கிழமை 2025
நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)
நாள் : 20 டிசம்பர் சனிக்கிழமை 2025
நேரம் : காலை 1:00 - 3:00 மணி (இலண்டன்)
காலை 6:30 - 8:30 மணி (இலங்கை, இந்தியா)
காலை 12:00 - 2:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)

“மாற்றுப் பண்பாட்டுப் பதிவுகளாக இலக்கியங்கள்”

உரை நிகழ்த்துபவர் : பேராசிரியர் உ. சேரன்



Zoom ID: 84777257162 Passcode: 554268

Vlambaram - December 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-14 5:56 PM Page 9



# தமிழர் தம் பண்பாட்டில் பேச்சுக்கலையும் அதன் உலகமயமாதலும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

### 9. தாயகமும், தமிழ்ப் பேச்சாளரும்

இலங்கையில் தமிழரது அரசியல் என்பது அப்புக்காத்த அரசியலாகவே மலர்ந்தது. சுதந்திரத்தின் முன்பே அரை நூற்றாண்டு கால அரசியல் சேர். பொன். இராம நாதனிடம் அடைக்கலம் பெற்றிருந்தது.



மேட்டுக்குடி அரசியல்வாதியான அவரது மேடைப் பேச்சுக்கள் பற்றி சமுதாய உரையாடல்களில் அதிகம் காண முடிய வில்லை. ஆனால், கூர்மையான நாவன்மை படைத்தவர் அவர். யாழ்ப்பாணக் கல்லூரி யில் கற்ற சமூக சீர்திருத்த சிந்தனையாளர் களினால் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் காங்கிரஸ் (1920களில்) மகாத்மா காந்தியை வரவழைத்து கதர் ஆடை அணியும் இயக்கம் ஆரம்பித்தனர். இளைஞர் காங்கிரஸ் முன்னணித் தலைவர்கள் மேடைப் பேச்சுக்களில் நன்கு பரிணமித்தனர். சமூக சீர்திருத்த உணர்வு களை நன்கு பரப்பினர்.

ஆறுமுக நாவலர், கிறிஸ்துவ மத மாற்றத்துக்கு எதிரான பேச்சுக்களை நிகழ்த்தினார். சிறந்த தமிழறிஞராகவும், சைவசமய காவலராகவும் பெயர் பெற்ற அளவுக்கு மேடைப் பேச்சாளராகவும் புகழ் பெற்றார்.



சுதந்திரம் பெற்றவுடனேயே தமிழர் அரசியல், தமிழர் உரிமை சார்ந்ததாகவே வளர்ந்தது. நாவன்மைமிக்க அரசியல் வாதிகளாக அமிர்தலிங்கம், கிழக்கு மாகாணத்தில் எஸ். இராஜதுரை, மசூர் மௌலானா, மஜீத் மற்றும் ஆலால சுந்தரம், புதுமை லோலன், வண்ணை ஆனந்தன் போன்ற பலரும் வலம் வந்தனர்.

ஆயுதப் போராட்டம் தொடங்கிய பின்பும் பல்வேறு இயக்கங்களிலும் பலர் கட்ட மைக்கப்பட்ட முறைகளில் இளைஞர் களைத் தம்முடன் இணைப்பதற்குரியவாறு மேடைப் பேச்சுக்களை மேற்கொண்டனர்.

புகழ் பெற்ற கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் நல்ல பேச்சாளர்களாக புகழ் பெற்றனர். ஒரேற்றர் சுப்ரமணியம், கம்யூனிஸ்ட் செந்தில்வேல், கார்த்தி கேயன், மாஸ்ரர் ஹண்டி பேரின்பநாயகம், மாதகல் கந்தசாமி போன்றோர் சமூக சீர்திருத் தங்கள் மற்றும் இடதுசாரி கருத்துகள் தொடர்பான மேடைப் பேச்சுக்களில் கொடிகட்டிப் பறந்தனர்.

பெரிய கல்லூரிகளில் சேக்கிழார் விழா, நாவலர் விழா போன்றவற்றில் பல மாணவ, மாணவியர் பேச்சுக் கலையில் பயிற்று விக்கப்பட்டனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, மகாஜனாக்கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி போன்ற பெரிய பாடசாலைகள் மாணவர் களுக்கு இலக்கியம், பண்பாடு சார்ந்த பேச்சுக்கலைப் பயிற்சிகளை வழங்கின.

திருமுருக கிருபானந்த வாரியார் வருடாந்தம் இந்தியாவிலிருந்து வந்து கோவில்களில் கதாப்பிரசங்கங்கள் செய்தார். மன்னார்-இராமேஸ்வரம் கப்பற் பாதை மூடப்படும் காலம்வரை தமிழக தமிழறிஞர்கள் யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளுக்கும் வந்து இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்தும் போக்கு அதிக மிருந்தது. திரு.வி.க., கி.வா. ஜகந்நாதன் போன்றவர்கள் பல தடவை வந்து பல



பாடசாலைகளில் இலக்கியப் பேச்சுக்களை நிகழ்த்துவது பெரிதும் இயல்பாயிருந்தது.

அரசியல் அமைதியின்மை, மின்சார மின்மை, நடமாடுவதற்கான தடைகள், புதிய வகை நெருக்கடிகளை உருவாக்கின. 1980-2010வரை இரவுகள் இல்லாமல் போயின. அச்ச உணர்வு பரவி இருந்தது. கோவில்கள் பிரசங்கங்களை நிறுத்தியிருந்தன. பேச்சு அரங்குகள் இல்லாமலே போயின.

2010இலிருந்து புதிய தொலைக்காட்சி சேவைகள் வடக்கில் ஆரம்பமாகின. டான் தொலைக்காட்சி புதிய இளைஞர்கள் பலரை ஊக்குவித்தது. பேச்சாளர்கள் வளரத் தொடங்கினர்.

லலீசன், சர்வேஸ்வரா, விஜயசுந்தரம், வேல்நம்பி, வாசுதேவன், ஸ்ரீபிரசாந்தன் போன்ற பலர் வளரத் தொடங்கினர். பட்டி மன்றங்கள், கம்பன் கழக விழாக்கள் போன்றவற்றின் நட்சத்திரப் பேச்சாளர் களாகி ஜொலித்தனர்.

# ஒரு வித்தியாசமான பாதை


**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.timelesstoday.com**
**www.premrawat.com**

எனது அணுகுமுறை சரியானது என்று எவ்வாறு எனக்குத் தெரியும்? அது எனக்குப் பயனளித்ததால், நம்பிக்கையுடன் அதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். எனக்குத் தாகமாக இருந்ததால், நான் ஒரு கிணற்றை வந்தடைந்தேன். என் தாகம் தணிந்தது. வேறு ஏதாவது அணுகுமுறைகள் இருக் கின்றனவா? நிச்சயமாக இருக்கின்றன. ஏன் நான் அந்த முறைகள் பக்கம் போகவில்லை? ஏனெனில், என் தாகம் தான் தணிந்துவிட்டதே.

உங்கள் மதம், தார்மீகம், அல்லது அரசியல் நம்பிக்கைகள் எதுவாக இருந்தாலும் அல்லது எந்த நாட்டைச் சேர்ந்தவராயிருந்தாலும் வயது, பால் நிலை, பாலியற் கருத்துகள் எதுவாக இருந்தாலும், உங்கள் வாழ்க்கையில் எனது அணுகுமுறையினை நீங்கள் பயன்படுத்தலாம். உங்களின் எந்தவொரு நம்பிக்கைக்கும் இது மாற்றீடு அல்ல. ஏனெனில், எனது அணுகுமுறையானது அறிந்து கொள்ளுதல் பற்றியதேயன்றி நம்பிக்கை கொள்ளுதல் பற்றியதல்ல. இந்த அடிப்படையான முக்கிய வேறுபாடு பற்றி நான் மேற்கொண்டு விளக்குவேன். அறிந்து கொள்ளுதல் என்பது உங்களின் தலைசிறந்த மனித இயல்புடன் மிக ஆழமானதொரு தொடர்பை ஏற்படுத்தவும், உங்களையே சகல பரிமாணங்களிலும் நீங்கள் அனுபவிப்பதற்கும் உங்களுக்கு உதவிபுரியும். உங்கள் நம்பிக்கைகளுடன் அது எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதைத் தீர்மானிப்பது உங்களைப் பொறுத்தது.

உங்கள் இதயத்தின்மீது மதிப்பும் நம்பிக்கையும் வைக்குமாறும், உங்கள் வழிகாட்டியாக உங்கள் மனதை மட்டும் நம்பியிருக்க வேண்டாம் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நமது அன்றாட அனுபவங்களில் பெரும்பாலான வற்றை மனமே வடிவமைப்பதால் மனத்தின் சரியானதும், தவறானதுமான செயல்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் உதவியாக இருக்கும். நமது கருத்துகளை வளப்படுத்தும் மற்றும் நமது அறிவாற்றலைக் கூர்மைப்படுத்தும் வாய்ப்புகளை அரவணைத்துக் கொண்டு நம் வாழ்வில் மனதின் நேர்மறையான மற்றும் எதிர்மறையான விளைவுகளை அடையாளம் கண்டுகொள்வது முக்கியம். ஆனால், பெரும்பாலும் நமது சமூகங்கள் இதயத்தைப் புறக்கணித்து மனத்திற்கு முன்னிடம் கொடுக்கின்றன. மூளையின் ஆற்றலினால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. உதாரணமாக "நீங்கள் யார்?" என்ற கேள்விக்கு நம் மனத்தால் மட்டுமே திருப்திகரமான பதிலொன்றை வழங்க முடியும் என்று என்னால் உறுதியாகக் கூற முடியாது. என் மனம், சென்ற தில்லை. நமது மனம் ஒழுங்காகச் செயல் படுவதற்கு அதனுள் போடப்பட்ட அனைத்து விடயங்களையும் சார்ந்து இருக்கும் அதேவேளையில், இதயமானது பெருமளவில் மனித மரபணுக்களைச் சார்ந்தே செயல்படுகிறது.

மனதைப் பற்றிப் பேசுகையில் வாசகர் களாகிய உங்களிடம் ஒரு வேண்டுகோள். நான் இந்தப் புத்தகத்தில் எழுதியிருப்பது உண்மை என்று நீங்களாக உணர்ந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் அறிவாற்றல் என் செய்தியை சந்தேகித்தா லும்சரி அல்லது ஏற்றுக்கொண்டாலும்சரி, திறந்த மனதுடன் உங்கள் உள்ளுணர்வு சொல்வதையும் கேளுங்கள். இந்த அணுகுமுறைக்கு ஒரு நியாயமான வாய்ப்பைக் கொடுங்கள். தொடரும் அத்தியாயங்கள் நீங்கள் எதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று சொல்வதற்குப் பதிலாக, நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய சில சாத்தியங்களை முன் வைக்கும். பயனுள்ள கண்ணோட்டங்களை வழங்கக்கூடிய அனுபவங்கள் பார்வை மற்றும் கதைகளை இங்கே பகிர்ந்து கொள்கிறேனே அல்லாமல், உங்களை தர்க்கரீதியாக நம்பவைப்பதற்காக அல்ல. தெளிவாக வெளிப்படுத்தப்படும் இதய பூர்வமான வார்த்தைகள் புரிதலை அடைவ தற்கான படிக்கற்களாகச் செயல்பட முடியும். உங்களுக்குக் கருத்துகள் மூலமும் அதற்கு அப்பாலும் சென்று உங்கள் உள் அனுபவத்திற்கான பாதை யைக் காட்டுகிறேன். தயவுசெய்து நான் கூறுவதை உங்கள் மனதால் மதிப்பீடு செய்யுங்கள். அதேநேரம் உங்கள் இதயத்தையும் கேளுங்கள்.



# நானிலம் போற்றும் நட்பு - 79



– அகணி –
authorakani@gmail.com

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ளவற்றில் ஒன்றான கார் நாற்பது நூலில் உள்ள பாடல்கள் சிலவற்றில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளைக் கடந்த இதழிலும் ஆராய்ந்தோம். இன்று கார் நாற்பது நூலில் உள்ள ஏனைய பாடல்களில் உள்ள நட்பு பற்றிய கருத்துகளை ஆராய்வோம்.

இப்பொழுது பாடல் 31இனைக் கவனிப்போம்.

"கார்ச் சேண் இகந்த கரை மருங்கின் நீர்ச் சேர்ந்து,
எருமை எழில் ஏறு, எறி பவர் சூடி,
செரு மிகு மள்ளரின் செம்மாக்கும் செவ்வி,
திருநுதற்கு யாம் செய் குறி".

சேண் என்பது ஆகாயம் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "எருமையினது எழுச்சியுடைய ஆண் கரையின் பக்கத்திலுள்ள நீரையடைந்து எறியப்பட்ட பூங்கொடிகளைச் சூடிக்கொண்டு போரில் வீரமிக்க வீரனைப்போல இறுமாந்திருக்கும் காலமே, நாம் திரும்பி வருவதற்கு அழகிய நெற்றியினை உடைய தலைவிக்குச் செய்த குறியாகும். எனவே விரைந்து தேரினை ஓட்டு" என்று தலைவன் பாகனிடம் கூறினான். தலைவன் தனது தோழனிடம் ஒளிவு மறைவு இன்றி தனது உணர்வுகளை வெளிப்படுத்துவதை இந்தப் பாடலில் காணலாம்.

இப்பொழுது பாடல் 32இனைக் கவனிப்போம்.

"கடாஅவுக, பாக! தேர் கார் ஓடக் கண்டே
கெடாஅப் புகழ் வேட்கைச் செல்வர் மனம்போல்
படாஅ மகிழ் வண்டு பாண் முரலும், கானம்
பிடாஅப் பெருந்தகை நற்கு".

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "அழியாத புகழை விரும்புகின்ற செல்வரது மனத்தைப்போல, வண்டுகள் பாடா நிற்கும். மேகம் ஓடுதலைக் கண்டு தேரை வேகமாக செலுத்துவாய்" என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.

இப்பொழுது பாடல் 33இனைக் கவனிப்போம்.

"கடல் நீர் முகந்த கமஞ் சூல் எழிலி
குடமலை ஆகத்து, கொள் அப்பு இறைக்கும்
இடம், என ஆங்கே குறி செய்தேம், பேதை
மடமொழி எவ்வம் கெட.".

எழிலி என்பது மேகம் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "கடலினது நீரை முகந்த மேகம், மேற்கு மலையிடத்து நீரினைச் சொரியும். அப்பொழுதே பேதையின் வருத்தம் நீங்கக் குறி செய்தோம். ஆகவே விரைந்து செல்வாய்" என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.

இப்பொழுது பாடல் 34இனைக் கவனிப்போம்.

"விரி திரை வெள்ளம் வெறுப்பப் பருகி,
பெரு விறல் வானம் பெரு வரை சேரும்
கரு அணி காலம் குறித்தார், திரு அணிந்த
ஒள் நுதல் மாதர் திறத்து".

ஒள் நுதல் என்பது நுண்ணிய நெற்றியை என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "மேகம் கடலினது நீரை உண்டு பெரிய மலையை அடையும் காலத்தை, தலைவர் தாம் மீண்டும் வருங்காலமாகத் தலைக்கோலத்தை அணிந்த ஒள்ளிய நெற்றியினை உடைய காதலி யிடம் குறிப்பிட்டார்" என்று தோழி தலைவியிடம் கூறினாள். இந்தப் பாடலில் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள்.

இப்பொழுது பாடல் 35இனைக் கவனிப்போம்.

"சென்ற நம் காதலர் சேண் இகந்தார்!" என்று எண்ணி
ஒன்றிய நோயோடு இடும்பை பல கூர,
வென்றி முரசின் இரங்கி, எழில் வானம்
நின்றும் இரங்கும், இவட்கு".

இரங்கு என்பது பரிவுறா நிற்கும் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "பிரிந்து சென்ற தலைவர், நெடுந்தூரத்தைக் கடந்து சென்றானென்று நினைத்து பசப்பு நோயுடன் பல துன்பங்களும் மிகப்பெறுதலால் அவளுக்காக மேகமும் மனம் இரங்கி நிற்கும்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

இப்பொழுது பாடல் 36இனைக் கவனிப்போம்.

"சிரல்வாய் வனப்பின ஆகி, நிரல் ஒப்ப
ஈர்ந் தண் தளவம் தகைந்தன் சீர்த்தக்க
செல்வ மழை மதர்க் கண், சில் மொழி, பேதை ஊர்
நல் விருந்து ஆக, நமக்கு".

பேதை என்பது காதலி என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "செம் முல்லைப் பூக்கள் குருவியின் வாய்போல் அழகுடையதாயிற்று. செல்வத்தையுடைய காதலியின் ஊரானது நமக்கு நல்ல விருந்தைத் தரும் இடமாகும். எனவே விரைந்து செல்வாயாக" என்று தலைவன் பாகற்குக் கூறினான். இந்தப் பாடலில் தலைவியை காணவிரைந்து செல்ல வேண்டும் என்ற தனது உணர்வை தலைவன் தோழனிடம் கூறுகின்றான்.

இப்பொழுது பாடல் 37இனைக் கவனிப்போம்.
"கருங் கடல் மேய்ந்த கமஞ் சூழ் எழிலி
இருங் கல் இறு வரை ஏறி, உயிர்க்கும்
பெரும் பதக் காலையும் வாரார்கொல், வேந்தன்
அருந் தொழில் வாய்த்த நமர்?".

உயிர்த்தல் என்பது நீரைக் காணுதல் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "கரிய கடலினைக் குடித்த கருவுற்ற மேகம் மழை பொழிந்து, அரசனது போர்த் தொழிலும் முடிந்தது. நம் தலைவர் வாராமல் இருப்பாரோ?" என்று தோழி தலைவியிடம் கூறினாள்".

இப்பொழுது பாடல் 38இனைக் கவனிப்போம்.

"புகர் முகம் பூழிப் புரள, உயர் நிலைய
வெஞ் சின வேழம் பிடியோடு இயைந்து ஆடும்
தண் பதக் காலையும் வாரார் எவன் கொலோ,-
ஒண்டொடி! - ஊடும் நிலை?"

> "A friend is someone who gives you total freedom to be yourself."
> – Jim Morrison -

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "ஆண் யானைகள், புழுதியிற் புரண்டு பெண் யானைகளுடன் விளையாடும். இக்காலத்தும் தலைவர் வரவில்லை. எனவே அவருக்காக நீ வருத்தப்படல் வேண்டாம்". என்று தோழி தலைவியிடம் கூறினாள். இந்தப் பாடலில் "தலைவன் வந்திருக்க வேண்டியவன். ஆனால் வரவில்லை. எனவே அவனுக்காக நீ கவலைப்பட வேண்டாம்" என்று தோழி தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள்.

இப்பொழுது பாடல் 39இனைக் கவனிப்போம்.

"அலவன் கண் ஏய்ப்ப அரும்பு ஈன்று அவிழ்ந்த
கருங் குரல் நொச்சிப் பசுந் தழை சூடி,
இரும் புனம் ஏர்க் கடிகொண்டார் பெருங் கௌவை
ஆகின்று, நம் ஊர் அவர்க்கு".

அவிழ்ந்த என்பது பின் மலர்ந்த என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். "வண்டின் கண்களை ஒப்ப அரும்பினை ஈன்று பின் மலர்ந்த கரிய பூங்கொத்தினை உடைய நொச்சியினது பசிய தழையைச் சூடிக்கொண்டு, உழவர் புதிதாக ஏர் உழத் தொடங்கினர். ஆதலால் நம் தலைவர்க்கு நம் ஊரின் கண் பெரிய அலராயிற்று" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

இப்பொழுது பாடல் 40இனைக் கவனிப்போம்.
"வந்தன செய் குறி வாரார் அவர்" என்று
நொந்த ஒருத்திக்கு நோய் தீர் மருந்து ஆகி,
இந்தின் கரு வண்ணம் கொண்டன்று, எழில் வானம்
ஏந்தும், - மென் பேதை! - நுதல்".

எழில் வானம் என்பது அழகிய முகில் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். "தலைவர் செய்த குறிகள் வந்துவிட்டன, தலைவர் வரமாட்டார் என்று நொந்த ஒருத்திக்கு, அழகிய மேகம் நோய் தீர்க்கும் மருந்தாகி கரிய நிறத்தைக் கொண்டது. உன் நெற்றி இனி ஒளி பெறும்" என்று தோழி மகிழ்ந்து தலைவியிடம் கூறினாள். இப்பொழுது தலைவர் வந்து விடுவார் என்று மகிழ்ச்சியுடன் தோழி தலைவிக்குத் தெரிவிக்கின்றாள். தலைவிக்கு வரப்போகும் மகிழ்ச்சியால் தானும் மகிழ்ச்சியடையும் தோழியின் பண்பு நட்பின் பெருமையை அழகாகச் சித்தரிக்கின்றது.

இன்று எடுத்துக்கொண்ட கார் நாற்பது பாடல்களில் தலைவியை தோழி ஆற்றுப்படுத்தலும், தலைவன் வரவில்லை என்று கவலைப்பட வேண்டாம் என்று ஆற்றுப்படுத்தலும், தலைவியிடம் விரைவாகச் செல்லவேண்டும் என தலைவன் தோழனி டம் கூறுவதும் கருப்பொருளாகக் காணப்பட்டன. கார் நாற்பது என்ற நூலில் உள்ள பெரும்பாலான பாடல்கள் நட்பின் பெருமைகளுக்குச் சான்றாக அமைந்துள்ளன. சில பாடல்கள் தலைவன் தலைவி காதல் உறவை வெளிக்காட்டுபவையாக உள்ளன. நட்பின் பெருமை கூறும் பாடல்களை மட்டுமே எடுத்துக் கொண்டோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# கைலாய நாதனையே காணலாமே!

**பெரி – முத்துராமன்**

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## பகுதி 4

ஒகஸ்ற் 08: காட்மாண்டுவிலிருந்து எங்கள் யாத்திரை இன்று துவங்கியது. இரண்டு ஜீப்புகளில், ஜீப்புக்கு நாலு பேர் வீதம், நேபாளின் எல்லை நகரமான கோடாரி நோக்கிப் புறப்பட்டோம். பல வருடங்களாக கோடரி வழி, வர்த்தகத்திற்கான வழியாக மட்டுமே இருந்து வந்துள்ளது. இந்த முறை மழையின் காரணமாக, சீன நேபாள எல்லை நடுவில் இருந்த நட்புறவு பாலம் சேதமடைந்ததன் காரணமாக, வர்த்தகப் பாதையை யாத்திரியர்களுக்கும் சீன அரசு திறந்து இருந்தது.

கோடாரியில் தத்தா பாணி வெந்நீர் அருவி இரவும் பகலும் பெரும் வேகத்துடன் கொட்டிக் கொண்டிருப்பது இயற்கையின் அதிசயம். அதில் குளிக்க நேபாள ரூபாய் 100 கொடுக்க வேண்டும். நாங்கள் அந்த வெந்நீர் அருவியில் குளித்தோம். தொலை தூரத்திலிருந்து மக்கள் இதில் குளிப்பதற்கு என்றே கூட வருகின்றனர்.

ஒகஸ்ற் 09: கோடாரிலிருந்து புறப்பட்டு, சீன எல்லைக்குள் இன்று நுழைந்தோம். இந்த இடத்தில் நேபாளப் பகுதியில், நிலச்சரிவு ஏற்பட்டு இருந்தது. அதனால் எங்கள் ஜீப் பயணம் தடைப்பட்டது. அந்த நிலச்சரிவை நாங்கள் நடந்து கடக்க வேண்டிய சூழ்நிலை. மிகவும் கடினமாகத் தான் இருந்தது. இருவர் எனக்கு உதவி செய்ய அதை நான் கடந்தேன்.

பின் சீன குடிவரவு மற்றும் சுங்கச் சோதனைகளை முடித்து, திபேத்தினுள் நுழைந்தோம். இங்கு எங்களுக்கு ஒரு வேன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்கள் எட்டு பேருடன் நேபாளிலிருந்து, ஒரு வழிகாட்டியும் வந்திருந்தார். இப்போது திபேத்தில், திபேத்திய வழிகாட்டி ஒருவரும் சேர்ந்து கொண்டார். டிரைவரையும் சேர்த்து நாங்கள் இப்போது 11 பேர் ஆனோம்.



கடந்த நான்கு ஐந்து வருடங்களாக, சீன அரசு இந்தியர்களுக்கு கைலாயம் செல்ல விசா கொடுக்கவில்லை. இந்த வருடம் இந்திய அரசாங்கத்துடன் ஏற்பட்ட புரிந்துணர்வின்படி, ஏராளமான இந்தியர் களுக்கு விசா வழங்கப்பட்டிருந்தது. நைலம் நகரை இரவு சென்றடைந்தோம். எங்கு பார்த்தாலும் நம் மக்கள் கூட்டம் தான். தங்க இடம் இல்லை என்று சொல்லி, சுமாரான ஒரு ஹோட்டலில் நான்காவது மாடியில் தங்க வைத்தனர். ஏறுவதற்கு லிப்ட் வசதி இல்லை. பொருட்களையும் தூக்கிக்கொண்டு ஏற வேண்டும். நாலாவது மாடியில் ஏறத்தாழ 60 பேர் இருந்தனர். அனைவருக்கும் ஒரே ஒரு பொதுக் கழிப்பிட வசதிதான் இருந்தது. அதிலும் தண்ணீர் இல்லை.

இந்த இடத்தில் பொதுவாக ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகின்றேன். காட்மாண்டுக்கு அடுத்தபடியாக, தங்கும் வசதி நன்றாக உள்ள ஒரே இடம், டார்ஜன் என்ற அடிவார நகரம்தான். மற்ற இடங்களில், மற்ற நாட்களில் கழிப்பிட வசதியைப் பெரிதாக எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கக் கூடாது.

யாத்திரை ஏற்பாட்டாளர்கள், அங்கங்கே வேளா வேளைக்கு உணவு தந்தனர். பல நேரங்களில் காலதாமதம் தவிர்க்க இயலாததாக இருந்தது. ஓய்வு கருதி, நாங்கள் பல இடங்களில் உணவைத்



தவிர்த்தோம். சிறு சிறு தின்பண்டங்கள், பழங்கள் போன்றவை எங்கள் உணவானது. சாப்பிடுவதற்கும் பெரிதாக விருப்பமில்லை. தண்ணீர் நிறையக் குடித்தோம். ஹோட்டல் அறைகளில் பிராணவாயு வைத்திருந்தனர். பயணத்தின் போதும் மூச்சு திணறிய இடங்களிலும் பிராணவாயுவைப் பயன்படுத்திக் கொண்டோம்.

ஒகஸ்ற் 10: சரியான தூக்கமின்றி முந்திய இரவு கழிந்தது. காலைக் கடன்கள் முடிப்பதிலும் சிரமம். அனைவரும் வருத்தத்தையும் கோபத்தையும் நேபாள மற்றும் திபெத்திய வழிகாட்டிகள் இடம் தெரிவித்தோம். அங்கு அவர்களால் சிறப்பாகச் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை. மீண்டும் பயணம் சிற்றுந்தில் தொடர்ந்தது. சாகா என்ற நகரை அடைந்து இரவு தங்கினோம். வழி நெடுக அருமையான இயற்கைக் காட்சிகளை, காணக் கூடியதாக இருந்தது.

ஒகஸ்ற் 11: சாகாவிலிருந்து புறப்பட்டு, மானசரோவர் ஏரியை அடைந்தோம். கயிலை மலை வெள்ளி அங்கி பூசியது போன்று சிறப்பாகத் தெரிந்தது. ஏரியில் இறங்கித் தண்ணீர் தெளித்துக்கொண்டு, வழிபட்டோம். குளிக்க அனுமதி இல்லை. அந்தத் தீர்த்தத்தையும் பாட்டில்களில் அடைத்துக் கொண்டோம். 146 கிலோ மீட்டர் சுற்றளவு உள்ள அந்த ஏரியை சிற்றுந்தில் இருந்தபடியே சுற்றி வந்தோம். சுற்றி வரும் சாலை மிக மோசமாக இருந்தது. ஆனால் பொதுவில் சீனாவில் சாலைகள் மிகச் சிறப்பாக அமைத்து இருந்தனர். இதுமட்டும் விதிவிலக்காக இருந்தது. அவ்வாறு சுற்றி வரும்பொழுது, ராவணன் தவம் செய்ததாகச் சொல்லப் படும் ராட்சஸ்தல் ஏரியையும் பார்த்தோம். இரவு மானசரோவர் ஏரிக் கரையில், தொட்டுவிடும் தூரத்தில், தகர டப்பா போன்ற கூடாரத்தில் வசதியாகப் படுக்க ஏற்பாடு செய்திருந்தனர். நன்கு தூங்க முடிந்தது.

ஒகஸ்ற் 12: வழிகாட்டிகள் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தனர். அதில் கை கால் முகம் கழுவிக் கொண்டோம். ஏரியில் கயிலை நாதர் பொன்னிறமாகத் தெரிந்தார். தரிசனத்தின்போது கண்களில் நீர் கசிந்தது. அதைத்தொடர்ந்து எங்கள் பயணம் மீண்டும் துவங்கியது. மதியம் கைலாய மலை அடிவார நகரான டார்சனை வந்தடைந்தோம். ஹோட்டல் வசதிகள் சிறப்பாக இருந்தது. ஒரு வெந்நீர் குளியல் முடித்து நிம்மதியாகத் தூங்கினோம்.

தொடரும்...

---

## ஏவிஎம் சரவணனின்....

07 ஆம் பக்கத்தொடர்ச்சி

பதில்: திரைப்படத் தயாரிப்பு என்றில்லை எந்தத் துறையில் வேலை செய்பவர்களாக இருந்தாலும் சரி உங்களுடன் வேலை செய்பவர்கள் என்றுதான் இருக்க வேண்டும். உங்களுக்குக் கீழ் என்று வரக் கூடாது. சரவணன் தாக்கத்தில் தமிழ் திரையுலகில் அதை நிறைய பின்பற்றி இருக்கின்றனர். கமலஹாசன் அப்படித் தான். என் அப்பாவும் அப்படித்தான். நானும் அதேபோல்த்தான். ஜெயலலிதா கூட நடிகையாக இருந்த காலகட்டத்தில் அப்படித்தான் இருந்தார். முதலாளியாக இல்லாமல் சக தொழிலாளியாக நடந்து கொள்ள வேண்டும். நீங்க நிறைய சம்பளம் கொடுக்க வேண்டும் என்றுகூட அவசியம் இல்லை. ஆனால், பாசமாக இருந்தால் வேலை வாங்கலாம் என்பது அவர் கற்றுக்கொடுத்ததுதான். தங்களிடம் வேலை செய்பவர்களுக்காக அவர்கள் ஒரு படமே எடுத்துக் கொடுத்தனர். லாபத்தை தொழிலாளிகளுக்குப் பிரித்துக் கொடுத்தனர். இதனால்த்தான் அவர் தெய்வமாகத் தெரிகிறார்.

கேள்வி: ஏவிஎம் தயாரிப்பில் ஏதாவது சிக்கல் வந்தால் அதை எப்படிக் கையாளுவார்?

பதில்: எல்லாவற்றையும் அவரே சரி செய்வார். அப்படி முடியவில்லை என்றால் உன் வழியை நீ பார்த்துகொள், என் வழியை நான் பார்த்துக்கொள்கிறேன். நாளை எங்காவது பார்த்தால் அண்ணன் தம்பிகள் இருக்க வேண்டும் என்று ஒதுங்கி விடுவார்.



கேள்வி: ஏவிஎம் சரவணன் என்றால் இப்போது உங்கள் நினைவுக்கு வருவது?

பதில்: அந்த வெள்ளை சட்டை, வெள்ளை பேண்ட், கைக்கட்டி நிற்பது இதுதான். யாராக இருந்தாலும் கைகட்டி பவ்யமாகத்தான் பேசுவார். அப்படி கைகட்டி அவர் நிற்பதைப் பார்த்தாலே நாம் 80 சதவிகிதம் இறங்கி விடுவோம். பின் அவர் நம்மிடம் நலம் விசாரிக்கும் விதத்தில் மீதி 20 சதவிகிதமும் இறங்கி சரணடைந்துவிடுவோம். அவரை யாரும் வேற்று ஆளைப்போல் நினைக்க மாட்டார்கள், நண்பராகத்தான் பார்ப்பர்.

மெய்யப்ப செட்டியார் மகன் என்பதை தாண்டிச் சரவணன் பழகும் விதத்தால் அவருடைய தனிப்பட்ட செயலால் சாத்தியமானது இது.

கேள்வி: தமிழ் சினிமா அவரை எப்படி நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என நினைக்கிறீர்கள்?

பதில்: ஏவிஎம் ஸ்டுடியோவில் அவருக்கு ஒரு சிலை வைக்க வேண்டும். எல்லா வற்றையும் ஆவணப்படுத்தி வரும் தலை முறை திரைப்படக் கலைஞர்களுக்கு வழிகாட்டியாக அதை வைக்க வேண்டும்.

**யோக சோதிடம்**

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

Vlambaram - December 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-14 5:56 PM Page 12



35 ஆவது ஆண்டில் கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்

VLAMBARAM

email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
4 Bedrooms bsmt for rent. Sep. entrance & 2 Parking. Close to Costco, bus stop & all facilities. Avail. January 01, 2026.
**647.721.3611/647.703.4738**

**VICTORIA PARK & FINCH**
2 Bedrooms walkout bsmt apartment for rent. 1 parking & laundry. Close to bus stop. No pets & No smoking. Avail.immediately.
**647.979.3476/ 416.991.7593**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. No parking. Couple/ 2 people Preferred. Close to GTA mall & all facilities. Avail. January 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.358.5843**

**BROCK & ROSSLAND -AJAX**
2 Bedrooms legal bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Close to all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.471.1015**

**NEILSON & MCLEVIN**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all amenities. Rooms also available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.766.7779**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms walk-out furnished bsmt Apt. for rent. Parking. No pets & no smoking. Small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.834.1081**

**DENISON & FEATHERSTONE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & parking. Close to Costco, Canadian Tire & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.897.3195**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to TTC, YRT & Srilankan Grocery store. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.558.2228**

**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to TTC, School & all facilities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.919.1681**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, laundry & 1parking. Close to TTC. Small family / student preferred. Avail. immediately.
**416.857.4338 / 647.332.1580**

**WARDEN & LAWRENCE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. in front of bus stop. Close to Costco & all facilties. Avail. immediately.
**416.757.8278/647.856.9868**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom walkout bsmt for rent. Utilities included. Close to all facilities. No parking. Couple / 2 Girls only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.534.4129**

**MCCOWAN & 14TH AVENUE**
1 Bedrooms basements for rent. Sep. entrance & parking. Close to bus stop, School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.295.8648**

**WESTNEY & HWY 401 - AJAX**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & parking. Close to bus stop, Bank & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.525.4288**

**MORNINGSIDE & SHEPPARD**
1Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.7595**

**MCCOWAN & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking. No smoking & no pets. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.703.8916**

**BRIMLEY & LAWRENCE**
2/3 Bedrooms walkout bsmt for rent. Parkings. Close to bus stop & STC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.923.1391**

## BASEMENT FOR RENT

**14TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to YRT Costco, Spiceland & all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.525.2316**

**ST. CLAIR & BIRCHMOUNT**
1 Large bedroom walkout bsmt for rent. 1 parking. Close to Warden subway, shopping mall & all facilties. No pet & no smoking
தொடர்புகளுக்கு: **647.234.7590**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt / Room for female for rent. Sep. entrance & 1 parking. Close to TTC, university, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.515.1631**

**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. 3 Min. walk to Steeles. Students/ Bachelors preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.3279**

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

**OLD FINCH & MORNINGVIEW**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking. Close to TTC & all facilities. Family preferred. Avail. Feb. 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.473.4200**

**MEADOWVALE & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Rent $1,100. Close to HWY 401. 24 hrs. bus service. Avail. any time.
தொடர்புகளுக்கு: **416.939.4381**

**MARKHAM & BRIMORTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & Parking. Small family preferred. Close to Centennial college. Avail. immediately.
**416.575.6226/647.341.1657**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to bus stop & all facilities. No pets & No Smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.770.3159**

**ROSSLAND & HARWOOD**
**AJAX -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance & sep. laundry. Close to new spiceland .TTC, schools. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.402.6578**

**PHARMACY & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt Apt. for rent. Sep. entrance. Close to public School, bus stop & all facilities. Couple / Ladies Preferred.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
3 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & parking. No smoking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.712.2692**

## BASEMENT FOR RENT

**LAWRENCE & SCARBOROUGH GOLF CLUB -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking. Close to TTC, bank, school & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.649.8893**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Spacious bedrooms walkout bsmt for rent. 1 parking. Close to TTC, HWY 401, UTSC & all facilities. No smoking & No pets. Avail. immediately.
**416.624.6895 /416.721.7832**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Couple/ family preferred. Close to all facilities. Avail. January 01, 2026.
**416.282.5376/647.992.5376**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**KENNEDY & ELLESMERE**
Room for rent in main floor. Male preferred. 2 Person can be share it. Close to all facilities. Avail. January 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.899.9199**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Large master bedroom with attached washroom for rent in the main floor. Ladies only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.972.3710**

**MIDLAND & ELLESMERE**
1 Bedroom for rent in main floor. Couple preferred. Close to TTC school, retail, Tim Hortons. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.848.2544**

**MORNINGSIDE & MCLEVIN**
1 Bedroom for rent in a house. Sep. washroom. Ladies Preferred. No Kitchen. Close to all facilities. Avail. immediately.
**416.720.4472 / 416.875.1211**

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Close to TTC & all stores. Male only. New immigrant preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.558.8562**

**MARKHAM & DENISON**
Rooms for rent. 5 Min. walk to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.897.3195**

**NEILSON & MCLIVEN**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, & 1 parking. Male only. Close to all facilities. Avail. immediately.
**647.460.3706/438.226.2592**

**MEADOWVALE & HWY 401**
1 Bedroom for rent in a 4 Bedrooms bsmt. 1 parking. Male only. Close to TTC, UofT & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.508.0370**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom for rent in a 2 Bedrooms bsmt. No parking. Male only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.6815**

## ROOM FOR RENT

**ROSSLAND & CHURCH (AJAX)**
1 Bedroom with attached washroom for rent in upstairs. Sep. kitchen & laundry. Nearby bus stop & all facilities. Avail. immediately.
**416.425.3713/647.464.9464**

**KENNEDY & SHEPPARD**
1 Master bedroom for rent in a condo. It has walk in closet. Christian preferred. Avail. January 01, 2026.
தொடர்புகளுக்கு: **647.309.2350**

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance & no parking. No pets & No smoking. Working people/ student preferred.
தொடர்புகளுக்கு: **647.855.5122**

**BRIMLEY & EGLINTON**
1 Room with attached washroom for rent in a bsmt. Sep. entrance & Parking. Close TTC, Subway, Nofrills. Avail. January 01, 2026.
தொடர்புகளுக்கு: **437.673.7516**

**BRIMLEY & STEELES**
1 Bedroom available in a 2 bedrooms bsmt. Female (Working / student) to share with another girl. Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.894.8349**

**ROUGHRIVER & SHEPPARD**
2 Bedrooms for rent in a main floor. Sep. washroom & parking. Female preferred. 10 Min. walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.920.2785**

**VICTORIA PARK & LAWRENCE**
1 Bedroom for rent in a 2 bed rooms bsmt. 1 Bed available in a 2 people sharing room. Rent $550. Parking available.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt with attached washroom. 24x7 bus. walking distance to STC & all facilities.
**416.807.6641/647.400.0290**

**MONINGSIDE & OLDFINCH**
1 Bedroom for rent in a bsmt. Male only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.327.3936**

## ROOM FOR RENT

**MCCOWAN & SHEPPARD**
One bedroom available on a short term basis in a low rise 4 bedroom condo unit on the second floor. Weekly rent is $200 Month $800.
தொடர்புகளுக்கு: **647.292.8769**

**STEVENSON & KING ST. W OSHAWA** - 1 Bedroom for rent in a main floor. Sharing washroom & parking. Male only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.854.6197**

**NEILSON & ELLESMERE**
Furnished rooms for rent in upstairs. 1 Parking. Close to TTC & & all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.247.9221**

**NEILSON & SHEPPARD**
Private & Sharing room for rent. Male only. 1 Min. walk to bus stop. 2 Min. walk to Malvern Mall & all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.278.2440**

**NEILSON & SHEPPARD**
Rooms for rent. Utilities included. On-site Laundry. Sep. entrance Male only. 2 Minute walk to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.984.9783**

**WARDEN & FINCH**
பகுதியிலுள்ள Condoவில் அறை குளியலறையுடன் வாடகைக்கு உண்டு. வேலைக்கு செல்வோர் விரும்பத்தக்கது.
**Pls. call or text: 647.648.8822**

**MORNINGSIDE & LAWRENCE**
1 Sharing room for rent in a bsmt. No Parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.358.9747**

**PHARMACY & DANFORTH**
1 Bedroom for rent in a upstairs. Sharing washroom. Close to Victoria park subway & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.960.1069**

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent in a 2Bedrooms bsmt. Sep. entrance. Female only. 1 Min. walk to TD bank, Centanniel college & bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.988.3864**

மேலும் பக்கங்கள் 13, 14, 15, 16

## ROOM FOR RENT

**NEILSON & FINCH**
1 Private room for rent in a Condo. Parking. Close to bus stop & all facilities. Avail. January 01, 2026.
தொடர்புகளுக்கு: **647.403.7268**

**SCARBOROUGH** பகுதியில் Bangalaw house Main floorஇல் Parking மற்றும் சாப்பாட்டு வசதியுடன் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: **647.667.0482**

**GORE ROAD & QUEEN - BRAMPTON -** 1 Bedroom for rent in a main floor. Ladies Preferred. Walking distance to bus stop & Grocery stores. Avail. immediately.
**647.202.4434/437.286.6812**

## CONDO. FOR RENT

**KINGSTON & PORT UNION**
2 Bedrooms & 2 washrooms brand new Condo. for rent. 1 Parking & Locker. Close to UTSC, HWY 401 & Go station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.772.3997**

**KINGSTON & WARDEN**
1 Bedrooms Condo. for rent. 24 Hrs TTC, Close to Street car & Subway & Catholic School. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

**MARKHAM & ELLESMERE**
2 Bedrooms & 2 washroom Condo. for rent. 1 Parking & 1 Locker. Close to TTC, HWY 401, STC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.804.4616**

**PORT UNION & SHEPPARD**
2 Bedrooms & 2 full washrooms Condo. for rent. 1 Parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.966.1292**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**
1 Room for rent in bsmt. Sep. en trance & Shared kitchen. No Parking. Male only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.825.0566**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

Vlambaram - December 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-14 5:56 PM Page 14



# வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**Full House, Condo, Basement & Business Unit**
**647-861-8240**

## HOUSE FOR RENT

**WHINCHTER & THICKSON - WHITBY -** 4 Bedrooms house & 2 bedrooms bsmt for rent. 1 parking. Close to bus stop, shopping centre & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.284.1962**

**WHITES & TAUNTON**
**PICKERING -** 3 Bedrooms & 2.5 brand new townhouse for rent. 3 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.248.1095**

**MARKHAM & DENISON**
3 Bedrooms stacked townhouse for rent. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.967.3680/905.471.2223**

**MCCOWAN & SANDHUST CIR.**
3 Bedrooms 2 story house for rent. 2 parking. Close to bus stop & all facilities. No pet & No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.831.5085**

**MARKHAM & STEELES**
3 Bedrooms & 2.5 washrooms house for rent. 3 parking. Close to bus stop, school, Amazon & Canada Post. Avail. Jan. 01, 2026.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

**MCCOWAN & MCNICOLL**
3 Bedrooms & 2 washrooms house & 2 Bedrooms bsmt for rent. Parking available. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.774.6599**

**NEILSON & FINCH**
3 Bedrooms house for rent. 2.5 washrooms, 2 parking. In front of Eraa super market & TTC. Family preferred. Avail. Jan. 01, 2026.
**Contact: 647.895.4542**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12, 13, 15, 16

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Close to TTC, Datta food & Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.8723**

## BASEMENT FOR RENT

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom walkout bsmt for rent. 5 Min. walk to Highland Farm, Hopper hut, TTC, Shops, etc.. Single/Students/ family of two preferred. Avail. Jan. 01, 2026.
**416.895.8111/416.291.6667**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & DENISON**
2 Bedrooms newly renovated spacious bsmt for rent. Front side Sep. entrance & parking. 2 Min. walk to Elementary & High schools. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.472.8586**

## BASEMENT FOR RENT

**MARKHAM & GOLDEN**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Walking distance to bus stop & all facilities. Avail. Jan. 05, 2026.
**647.765.7303/416.678.3315**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to TTC, Mall & all facilities. Avail. immediately.
**416.271.5420/647.991.9631**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to TTC, School, Shoppling & all facilities. Family preferred. Avail. immediately.
**647.686.7291/647.781.7291**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms & 1 washroom basement for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & EGLINGTON**
1 Bedroom + Den bsmt for rent. Sep. entrance, laundry & 1 parking. Close to TTC, Go station & Eraa supermarket. Family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.278.3430**

## BASEMENT FOR RENT

**CORONATION & ROSSLAND**
**WHITBY -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Walking distance to bus stop (Direct bus to Scar. 920). Avail. immediately. Moving & Carpet cleaning also available.
தொடர்புகளுக்கு: **647.290.7284**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. The buses runs across to the house. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.669.9254**

## BASEMENT FOR RENT

**BIRCHMOUNT & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & sep. laundry. Close to all facilities. Couple preferred. Avail. January 01, 2026.
தொடர்புகளுக்கு: **647.961.7076**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & HWY 401**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to TTC, Parkway Mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.802.9040**

## BASEMENT FOR RENT

**FINCH & PHARMACY**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. No Parking. Single person preferred. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.277.9044**

## BASEMENT FOR RENT

**KINGSTON & WHITES**
**PICKERING** - 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry & 1 parking . Close to bus stop, Shopping mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.902.3103**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom fully renovated bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to bus stop & school. Avail. Jan. 01, 2026.
தொடர்புகளுக்கு: **647.828.8376**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to bus stop, Centenneial college, STC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.271.4068**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & EGLINTON**
3 Bedrooms & 1 washrooms bsmt. Apt. for rent.
**HOOVER PARK DR. & 10TH LINE STOUFFVILLE**
2 Bedrooms & 2 washrooms bsmt Apt. for rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

## BASEMENT FOR RENT

**LIVERPOOL & LINWOOD**
**PICKERING -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to go station, bus stop & Pickering mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.606.7789**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to school & all facilities. Avail. immediately.
**416.822.4891/416.388.3501**

## BASEMENT FOR RENT

**PORT UNION & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to Close to TTC, Nofrills, Metro & all facilities. 3 Min. to HWY 401. Avail. January 01,2026.
தொடர்புகளுக்கு: **416.871.7082**

Vlambaram - December 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-14 5:56 PM Page 15



## BASEMENT FOR RENT
**FINCH & PHARMACY**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. No Parking. Single person preferred. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.277.9044**

## CONDO. & BASEMENT FOR RENT
**CROW TRAIL & NEILSON**
2 Bedrooms & 2 full washrooms Condo. for rent. 1 Parking.
**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. en trance & 1 parking.
தொடர்புகளுக்கு: **416.509.7247**

## HOUSE FOR SALE
**9TH LINE & MAIN ST.**
**Stouffville** - 4 + 2 Bedrooms house for private sale. Close to all facilities. 1st time Buyer preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.829.4133**

## HOUSE FOR RENT
**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms & 2 washrooms Two-story Townhouse for rent. Parking & laundry. Close to all major supermarkets, 24Hr Bus with 1 minute walk. No pet or smoke.
தொடர்புகளுக்கு: **416.477.8746**

## BASEMENT & ROOM FOR RENT
**ROSSLAND & CHURCH-AJAX**
1 Bedroom walkout bsmt for rent. 1 Parking. Also 2 Bedrooms for ladies in upstairs. Close to bus stop, school & all facilities. Avail. immediately.
**416.786.2701/289.660.2738**

## CONDO FOR RENT
**MCLEVIN & NEILSON**
2 Bedrooms condo. for rent. 2 washrooms, balcony, living room, laundry room, kitchen & 1 parking. Avail. January 08, 2026.
தொடர்புகளுக்கு: **647.970.8392**

## HOUSE & BASEMENT FOR RENT
**LAWRENCE & PORT UNION**
3 Bedrooms in main floor & 1 Bed room bsmt for rent. Sep. entrance & parking. Close to Centennial college, Scar. campus. & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.406.2435**

## HOUSE & CONDO. FOR RENT
**MCCOWAN & FINCH**
3 Bedrooms town house for rent. 1.5 washrooms & 2 parking.
**MARKHAM & HWY 401**
1 Bedroom Condo. for rent. 1 Parking. Close to STC, bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.820.2539**

## BASEMENT & ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 Bedroom for rent in a main floor. Close to TTC, UofT, shopping mall & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.274.7088**

## CONDO. FOR LEASE
**KENNEDY & HWY 401**
2 Bedrooms Condo. for lease. 2 washrooms. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.277.9044**

## HOUSE FOR RENT
**MARKHAM & STEELES**
4 Bedrooms & 2 living room house for rent. 3 washrooms & 2 parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.662.1529**

## HOUSE FOR RENT
**KENNEDY & EGLINTON**
4 Bedrooms in main floor & 2 Bedrooms bsmt full house for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
**647.869.3509 /416.271.2377**

## BASEMENT & ROOM FOR RENT
**SALEM & ROSSLAND (AJAX)**
2 Bedrooms walkout bsmt for rent. 1 Parking. Family/Couple preferred. 1 Bedroom for rent in a 2 bed rooms bsmt. 1 Parking. Male only.
தொடர்புகளுக்கு: **647.534.6262**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE /ROOM FOR RENT
**TAPSCOTT & FINCH**
3 Bedrooms & 3 washrooms house for rent. Rent $2,900+ Utility. Rooms for rent. Rent$800. No alcohol, no pets & no smoking. Avail. immediately.
**647.507.2148/647.864.1051**

## OFFICE SPACE FOR RENT
**MARKHAM & FINCH- SCABOROUGH**
**MAIN & QUEEN ST. - BRAMPTON**
Office rooms for rent. Suitable for professional offices & Meeting Space /Medical Clinic/ Educational Classes. Evening 5Pm-10Pm (Week days) & weekends class rooms for rent.
**416.918.9848/416.857.7603**

## ROOM FOR RENT
**LAWRENCE & BELLAMY**
2 Bedrooms for rent in upstairs. Close to bus stop, Cederbrae mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.949.6204**

## ROOM FOR RENT
**KIPLING & REXDALE**
1 Bedroom for rent in a basement. Sep. entrance, rent includes utilities & high internet, parking & laundry. Close to TTC. No pets/no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.407.1778**

## HOUSE FOR RENT
**NEILSON & SHEPPARD**
4 Bedrooms & 1.5 washrooms main floor for rent. 2 Parking. Close to TTC, Malvern Mall, Centeneneil college & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.357.5407/647.339.9943**

## HOUSE & BASEMENT FOR RENT
1. **MORNINGSIDE & SHEPPARD -** 4 Bedrooms & 3 full washrooms house & 2 Bedrooms & 1 washroom bsmt.
2. **MARKHAM & STEELES -** 4 Bedrooms & 3 full washrooms house & 2 Bedrooms & 1 washroom bsmt.
3. **MCCOWAN & ELLESMERE -** 3 Bedrooms & 2 full washrooms house & 2 Bedrooms & 1 washroom bsmt.
4. **PICKERING -** 4 Bedrooms & 3 full washrooms house & 2 Bedrooms & 1 washroom bsmt for rent.

தொடர்புகளுக்கு: **647.850.7831**

## FOR RENT - HOUSES, CONDOS & BASEMENTS
**SCARBOROUGH -PHARMACY & SHEPPARD -**2 Bed/2 Bath Condo.
**PICKERING - WHITE & TAUNTON -** 4 Bed /4 Bath house
**AJAX - LAKE RIDGE & ROSSLAND -** 2 Bed Basement
**WHITBY - LAKE RIDGE & DUNDAS -** 1+Den Basement
**MORNINGSIDE & MCNICOLL -** 2 Bed Basement
**Please call or text - 647.269.0193**

## BASEMENT/ROOM FOR RENT
**9TH LINE & HOOVER PARK -** 2 Bedrooms & 2 washrooms big bsmt for rent. Sep. entrance & 1 parking.
**MARKHAM & STEELES -**1 Bedroom bsmt for rent. Sep. entrance.
**CONLINS & SHEPPARD -** Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.3355**

## HOUSE FOR RENT
**MARKHAM & SHEPPARD**
3 Bedrooms & 3 washrooms mainfloor & 2 Bedrooms bsmt full house for rent. Sep. entrance & 4 Parking. Avail. immediately.
**MARKHAM & 14TH AVENUE**
3 Bedrooms & 3 washrooms mainfloor & 2 Bedrooms bsmt full house for rent. Sep. entrance & 4 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.883.1054**

## வேலைக்கு ஆள் தேவை

**வயோதிபர் பராமரிப்பு**

MARKHAM & ELLESMERE பகுதியில் உள்ள வீட்டில் பகுதிநேரமாக வயோதிபர் ஒருவரைப் பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு: **647.703.8916**

## முதியோர் பராமரிப்பு

**SCARBOROUGH** பகுதியில் வயதான பெண் ஒருவருக்கு உணவு சமைத்து அவரைப் பராமரிப்பதற்கு **(Full Time)** பெண் ஒருவர் தேவை. தங்குமிட வசதி உண்டு.

**416.896.4904/647.403.0744**

## FINANCIAL CONSULTATION

1. Stop Power of Sale
2. Private Financing
3. Bankcrutcy
4. Consumer Proposal.
5. Credit Repair

**Contact: 647.514.0431**

## Are you looking for a Mortgage?

we'll help you to find a mortgage, whatever your circumstances.

we can help with
Moving Home
Help-To-Buy
First time Buyers
Remortgaging
Buy-To-Let

Please Call:
**647.850.7831**

## PARTNERSHIP

**KITCHEN FACTORY**

நடைமுறையில் இயங்கிவரும் கம்பனியுடன் இணைந்து செயல்படுவதற்கான அரிய சந்தர்ப்பம்.

இடம்: **Scarborough**

**4+** வருட அனுபவம் தேவை (Kitchen cabinet Making)

**Contact: 647.514.0431**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**Ajax** பகுதியிலுள்ள சிகை அலங்கார நிலையம் ஒன்றிற்கு தொழில் அனுபவமுள்ள வேலையாட்கள்(Barber)தேவை

இலங்கையர்/இந்தியர் விரும்பத்தக்கது

**(FULL TIME OR PART TIME)**

**Call: 647-295-5672**

## பராமரிப்பாளர் தேவை

வயோதிபப் பெண்மணியைப் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும். **OSHAWA**வில் வாழ்பவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **416.875.0976**

## PHOTOGRAPHY

உங்கள் வீட்டின் சிறியளவிலான மற்றும் பெரியளவிலான கொண்டாட்டங்களுக்கு **Professional Photography** சேவை எம்மிடம் உண்டு



படப்பிடிப்புத் தேவைகளுக்கு அழையுங்கள்:

**416.277.4245**

## WALK IN CLINIC

**DR.U.SOMASUNDARAM**

Family Physician

1200 Markham Road, Unit No.115
Scarborough, ON M1H 2Y9

**T: 416.439.8085**

**Open Hours - Monday - Friday**
**9:00Am - 7:00 Pm**

## முதியோர் பராமரிப்பு

**SCARBOROUGH**வில் குறுகியகால மற்றும் நீண்ட கால முதியோருக்கான பராமரிப்பு குறைந்த கட்டணத்துடன் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.667.0482**

## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME / PART TIME

**CHEF, LINE COOK & BREAKFAST COOK**

**QUEEN & LESLIE**இல் அமைந்துள்ள **English Pub** ஒன்றிற்கு **Chef, line Cook & Breakfast cook** போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.

**Call: 416.220.9179 Email: chadsenagroup@gmail.com**

## திருமண சேவை


கனடா மற்றும் இலங்கையில் வாழும் பொருத்தமான மணமக்கள் எம்மிடம் உண்டு. கனடாவில் வாழும் மணமகன்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **437.849.9619**

## CAR FOR SALE

2006 TOYOTA PRIUS Hybrid.
284,000 Kilo meters.
2003 TOYOTA Matrix.
261,000 Kilo meters.

தொடர்புகளுக்கு: **416.688.8364**



## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

**தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்**
**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

**விளம்பரம் பத்திரிகையை எப்பொழுதும் எங்கிருந்தும் 24 மணிநேரமும் வாசிக்க - vlambaram.com**
**தொலைபேசி இல - 416.282.8059**

## பழமொழியும் அதன் விளக்கமும்....

**பாத்திரம் அறிந்து பிச்சையிடு...!**

**விளக்கம்:** பிச்சையிட்டால் நமக்குப் புண்ணியம் என்று நினைக்கிறோம். ஆனால் பிச்சை கேட்போர் உண்மையாகவே வாழ்க்கையில் கஷ்டப்படுகின்றனரா என்று பார்த்து பிச்சையிட்டால்தான் நமக்குப் புண்ணியம். நல்ல வாழ்க்கைத் தரம் இருந்தும் சோம்பேறித்தனமாய் பிச்சையெடுப்போருக்குப் பிச்சையிட்டு அவர்களை ஊக்குவிக்கக் கூடாது.








# கிளிக்கண்ணிகள் – ( பழித்தறிவுறுத்தல்) மகாகவி சுப்பிரமணிய பாரதி அவர்கள் இயற்றியவை

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமு மின்றி,
வஞ்சனை சொல்வா ரடீ! - கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி.

கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டத்தில் கொள்ளா ரடீ! - கிளியே!
நாளில் மறப்பா ரடீ

சொந்த அரசும்புவிச் சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டாகு மோ? - கிளியே!
அகலிகளுக் கின்ப முண்டோ?

கண்கள் இரண்டிருந்தும் காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்டமடீ! - கிளியே!
பேசிப் பயனென் னடீ

யந்திர சாலை யென்பார் எங்கள் துணிகளென்பார்,
மந்திரத் தாலே யெங்கும் - கிளியே!
மாங்கனி வீழ்வ துண்டோ!

உப்பென்றும் சீனி என்றும் உள்நாட்டுச் சேலை என்றும்
செப்பித் திரிவா ரடீ! - கிளியே!
செய்வ தறியா ரடீ!

தேவியர் மானம் என்றும் தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால் - கிளியே!
நம்புத லற்றா ரடீ!

மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலு யிரைக் - கிளியே
பேணி யிருந்தா ரடீ!

தேவி கோயிலிற் சென்று தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக் - கிளியே
அஞ்சிக் கிடந்தா ரடீ!

அச்சமும் பேடி மையும் அடிமைச் சிறு மதியும்
உச்சத்திற் கொண்டா ரடீ - கிளியே
ஊமைச் சனங்க ளடீ!

ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக் கோர் கணமும் - கிளியே
வாழத் தகுதி யுண்டோ?

மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில் - கிளியே!
இருக்க நிலைமை யுண்டோ?

சிந்தையிற் கள்விரும்பிச் சிவசிவ வென்பது போல்
வந்தே மாதர மென்பார்! - கிளியே!
மனத்தி லதனைக் கொள்ளார்

பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப்
பழமை இருந்த நிலை! - கிளியே!
பாமர ரேதறி வார்!

நாட்டில் அவமதிப்பும் நாணின்றி இழி செல்வத்
தேட்டில் விருப்புங் கொண்டே! - கிளியே!
சிறுமை யடைவா ரடீ!

சொந்த சகோ தரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்கா ரடீ! - கிளியே!
செம்மை மறந்தா ரடீ!



பஞ்சத்தும் நோய்க ளிலும் பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தும் கண்ணாற் கண்டும் - கிளியே!
சோம்பிக் கிடப்பா ரடீ!

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா - கிளியே!
வந்தே மாதர மென்பார்!



பல்வைத்திய கலாநிதி
இளமுருகனார் பாரதி

Vlambaram - December 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-12-14 5:56 PM Page 18



# கனடா நாதவீணா மன்றத்தின் ஆண்டுவிழா – 2025

**சுலோச்சனா அருண்**

கனடாவில் நாதவீணா மன்றத்தின் 19ஆவது ஆண்டு நிறைவுவிழா சென்ற வாரம் மிகச் சிறப்பாக ரொறொன்ரோவில் உள்ள தமிழ் இசைக்கலாமன்றத்தில் நடைபெற்றது. இந்த ஆண்டு விழாவில் ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான குரு அரவிந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். மங்கல விளக்கேற்றி, தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண் இசைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

வீணை ஆசிரியர் திருமதி. குகனேஸ்வரி சத்தியமூர்த்தி கனடாவில் கடந்த 19 வருடங்களாக நாதவீணா மன்றத்தின் அதிபராக இருந்து வீணை இசையைக் கற்பித்து வருகின்றார். இவர் இசைக்கலை மணி பட்டத்தையும், வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தை முடித்து சங்கீதகலாவித்தகர் பட்டத்தையும் வீணை இசையில் பெற்றவர். இவரிடம் வீணை இசை கற்ற 8 மாணவர்கள் இதுவரை கனடாவில் அரங்கேற்றம் முடித்திருக்கின்றனர்.

இந்த நிகழ்வில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றித் தமது திறமையை வெளிக்காட்டியிருந்தனர். மொழிக்கலப்பில்லாமல் தமிழ்ப் பாடல்களை வீணையில் இசை மீட்டமுடியும் என்பதை ஆசிரியர் தனது மாணவர்கள் மூலம் வெளிப்படுத்தி இருந்தார். அது மட்டுமல்ல, முருகனைப் போற்றும் பக்திப் பாடல்களும் இந்த நிகழ்வில் இடம் பெற்றிருந்ததால், பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட எழுத்தாளர் குரு அரவிந்தன் தனது உரையில், “நாத வீணா மன்றத்தின் தாரக மந்திரமாக ‘ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்



புடைத்து.’ என்ற திருக்குறள் இருக்கின்றது. குருவான ஆசிரியரிடம் இருந்து பெற்ற கல்வி தொடர்ந்து பல தலைமுறைகளுக்குக் கொண்டுசெல்லப்பட வேண்டும் என்பதைத்தான் திருவள்ளுவர் இங்கே அழகாகக் குறிப்பிடுகின்றார். ஆனால், இந்த மாணவர்களில் ஒருவருமே இனிவரும் காலங்களில் ஆசிரியர்களாக மாறாவிட்டால், என்ன நடக்கும்? மிகவும் கஸ்டப்பட்டுப் பயின்ற இந்தக் கலை இவர்களுடன் முடிந்துவிடும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும், எனவே உங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்தும் இத்துறையில் ஈடுபடுவதற்கு ஆதரியுங்கள், என்னிடம் கல்வி கற்ற சில மாணவர்களை மேடையில் பார்க்கும் போது எனக்குப் பெருமையாக இருக்கிறது என்று அங்கு கூடியிருந்த பெற்றோருக்கு எடுத்துரைத்தார்.

அவர் மேலும் குறிப்பிடும்போது எங்கள் பாரம்பரிய இசைக்கருவி பற்றிப் பல பாடல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டினார். ஆரண்ய காண்டத்தில் ‘உற்றவன் காண் தகும் நீண்ட வீணைக்கொடிப் பற்றி ஒடித்து உயர் வானவர் ஆசி கொண்டான்’ என்று கம்பரும், சம்பூர்ண ராமாயணம் திரைப் படத்திற்காக மருதகாசி ‘ஆனந்தகான



அமுத மழையே பொழிந்து, மனம் தனை உருக வழி செய்த வீணைக்கொடியுடைய வேந்தனே!’ என்று இராவணனைப் பாராட்டுவதையும், 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் ‘மாசில் வீணையும்’ என்றும், ‘எம்மிறை நல்வீணை வாசிக்குமே’ என்று சம்பந்தரும் பாடியிருப் பதையும் நினைவூட்டினார். மேலும் அவர் தனது உரையில், ‘வெள்ளைத்தாமரைப் பூவில் இருப்பாள் வீணை செய்யும் ஒலி யில் இருப்பாள்’ என்றும் ‘நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதி யில் எறிவதுண்டோ’ என்றும் புதுமைக்கவி பாரதியார் வீணை பற்றிக் குறிப்பிட்டதை யும், புரட்சிக்கவி பாரதிதாசனோ ஒருபடி மேலே சென்று. “துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?” என்று கேட்டதையும்



குறிப்பிட்டார்.

முற்காலத்தில் தமிழர் பாவித்த ‘செங்கோட்டி யாழே’ பின்னாளில் வீணையாக மாறியதாக ‘பாணர் கைவழி’ என்ற ஆபிரகாம் பண்டிதரின் மூன்றாவது மகனான வரகுணபாண்டியன் எழுதிய நூலில் மிக விளக்கமாக சொல்லப்பட் டிருப்பதையும் எடுத்துக் காட்டினார். சங்க இலக்கியத்தில் திருக்குறள் காலம்வரை யாழ் பற்றியே குறிப்பிடப்பட்டிருந்ததையும், அதன்பின் சிலப்பதிகாரத்தில்தான் யாழ் என்ற சொல்லுக்குப் பதிலாக வீணை என்ற சொல் பாவிக்கப்பட்டதையும், யாழ் என்பதும் வீணை என்பது அடிப்படையில் ஒரே கருவியைக் குறிப்பதாகவும், எங்கள் விபுலானந்த சுவாமிகளும் யாழ் பற்றி ஆய்வு செய்து யாழ்நூலை எழுதியிருப் பதையும், இதுபோன்ற நிகழ்வுகள் எங்கள் மொழியும், பண்பாடும் இந்த மண்ணில் தொடர்ந்தும் நிலைத்து நிற்க வழி வகுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இசை மற்றும் நடன ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்ட நாதவீணா மன்றத்தின் இந்த நிகழ்வை ஆசிரியை சிவலோக நாயகி கெங்கேஸ்வரராஜா மிகவும் சிறப்பாகக் கொண்டு நடத்தினார்.

---

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை
மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

### “நான் இந்துவாக இருப்பதில் பெருமை கொள்கிறேன்” - மறைந்த கவியரசர் கண்ணதாசன் ‘அர்த்தமுள்ள இந்து மதம்’

நான் இந்துவாக இருக்க விரும்பும் காரணங்கள்:

1. கடவுள் இல்லை என்று சொன்னாலும் குற்றவாளி என்று சொல்லாத மதம்.

2. இன்றைய தினத்தில் இத்தனை மணிக்கோ அல்லது தினமும் கோயிலுக்கு சென்றே ஆகவேண்டும் என்று வரையறுக்காத மதம்.

3. காசிக்கோ, ராமேஸ்வரத்திற்கோ சென்றே ஆக வேண்டும் என்று கட்டளை இடாத மதம்.

4. இந்து மதத்தின் புத்தகத்தின்படி வாழ்கையை நடத்த வேண்டும் என்று கூறாத மதம்.

5. மத குறியீடுகளை அணிந்தாக வேண்டும் என்று வரையறை செய்யாத மதம்.

6. ஒட்டு மொத்த இந்து சமூகத்தை கட்டுபடுத்தும் மதத்தலைவர் என்று யாரும் இல்லை.


7. தவறு செய்தவன் சாமியாராக இருந்தாலும் தவறு என்று சுட்டிக்காட்டும் உரிமை இந்துகளுக்கு உண்டு.

8. இயற்கையாய் தோன்றியவற்றில் இழிபிறவி என்று எதுவுமில்லை. மரமும் கடவுள், கல்லும் கடவுள், நீரும் கடவுள் (கங்கை), காற்றும் கடவுள் (வாயு), குரங்கும் கடவுள் (அனுமன்), நாயும் கடவுள் (பைரவர்), பன்றியும் கடவுள் (வராகம்).

9. நீயும் கடவுள், நானும் கடவுள். பார்க்கும் ஒவ்வொன்றிலும் பரமாத்மாஉண்டு.

10. எண்ணிலடங்கா வேதங்களை கொடுக்கும் மதம்.

பக்திக்கு பன்னிரு திருமுறைகள்,
பெண் ஆசையை ஒழிக்க இராமாயணம்,
மண் ஆசையை ஒழிக்க மகாபாரதம்,
கடமையின் முக்கியத்துவத்தை உணர்த்த பகவத்கீதை,
அரசியலுக்கு அர்த்தசாஸ்த்திரம்,
தாம்பத்தியத்திற்கு காமசாஸ்திரம்,
மருத்துவத்திற்கு ஆயுர்வேதம்,
கல்விக்கு வேதக் கணிதம்,
உடல் நன்மைக்கு யோக சாஸ்த்திரம்,
கட்டுமானத்திற்கு வாஸ்து சாஸ்திரம்,
விண்ணியலுக்கு கோள்கணிதம்.



11. யாரையும் கட்டாயப்படுத்தியோ அல்லது போர் தொடுத்தோ பரப்பப்படாத மதம்.

12. எதையும் கொன்று உண்ணலாம் என்ற உணவு முறையிலிருந்து ‘கொல்லாமை’, ‘புலால் மறுத்தல்’, ஜீவகாருண்ய ஒழுக்கம் மற்றும் சைவம் என்ற வரையறையை கொடுத்த மதம்.

13. இந்துக்களின் புனிதநூல் என்று ஒரு நூலை குறிப்பிடுவது மிகவும் கடினம். ஏனெனில் பெரியோர்கள் அளித்த அனைத்து நூல்களும் புனிதமாகவே கருதப்படுகிறது.

13. முக்தி எனப்படும் மரணமில்லா பெரு வாழ்விற்கு வழிகாட்டும் மதம்.

14. சகிப்புதன்மையையும், சமாதானத்தையும் போதிக்கும் மதம்.

15. கோயில் என்ற ஒன்றை கட்டி அதில் வாழ்க்கையின் தத்துவத்தையும், உலக இயக்கத்தின் இரகசியத்தையும் உலகிற்கு அளித்த மதம்.

இன்னுமும் சொல்லிகொண்டே போகலாம்......

இந்துஎனில் இழி செயல் புரியாதீர்கள். பிற மதத்தை இகழாதீர்கள்.

இந்துவாக (இயற்கையாளனாக) வாழ்வதில் பெருமை கொள்.
மதங்களை மாற்ற முயலாதீர்கள். மதத்துள் குப்பைகளை செருகாதீர்கள்.

–அருளம்பலம் –